
# சம
# காலம்



சமுக விஞ்ஞான அறிவியல்

மாத இதழ் 1 கார்த்திகை 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

KUMARANS

# குமரன்ஸ்

**Wholesale & Retail**

142 - 144 Hoe Street, Walthamstow, London E17 4QR

Tel : 020 8521 4955
020 8521 4411
020 8530 3033

Fax : 020 8521 9482
020 8530 5655

வங்கி மூலம் துரித பணமாற்றுச் சேவை!!
Smart Money Exchange to Sri Lanka, India, Pakistan, Switzerland, Germany and Canada
Reg.No. 121 1499500001

லீலா



உங்களுக்கு அன்றாடம் தேவையான லீலா மற்றும் கிருஸ்ணா தயாரிப்புப் பொருட்களை மொத்த விற்பனை விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்

## KUMARAN TEXTILE

136 Hoe Street
Walthamstow
London E17 4QR
020 8521 3444

e-mail: textile@kumarans.uk.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒளியாய் நின்றார்
# வழியாய்க் கண்டனர்

கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தில் ஒளியாய் இறைவன் நின்றான் என்பது தமிழர் நம்பிக்கை.

முதலில் இது குறித்து தமிழ் மக்களிடை நிலவும் பரம்பரைக் கதையினை எடுத்து நோக்குவோம். படைத்தல் கடவுளாகிய பிரம்மனா காத்தல் கடவுளாகிய விஸ்ணுவா யார் பெரியவரென்ற ஆணவ முனைப்பு மும் மூர்த்திகளில் இருவரிடத்தில் தோன்றிய வேளை மூலமுதலாகிய சிவன் அடியும் முடியும் தெரியா நீள் ஒளியாகத் தோன்றினான். யார் இந்த நீள்ஒளியின் அடியையும் முடியையும் காண்பரோ அவரே பெரியவர் என்று கொண்டிடலாமெனப் பிரம்மனும் திருமாலும் இணங்கினர்.

பிரம்மா அன்ன வடிவெடுத்து முடி தேடி மேலெழ விஸ்ணு வராக உருவெடுத்து அடிதேடி பாதாளம் நோக்கிப் புறப்பட்டார். ஆயினும் தங்கள் முயற்சியின் இயலாமையை உணர்ந்து ஆணவ ஒடுக்கம் பெற்று சிவப் பரம்பொருளிடம் நீள் ஒளிவடிவை முடி அடி தெரியும் அக்கினி மலையாய் மாற்றிக் காட்சி தந்திடல் வேண்டும் அம்மலையின் கிழக்குத் திசையில் லிங்க வடிவில் எழுந்தருளிடல் வேண்டும் என வேண்டினர். இம்மலையே இன்றைய திருவண்ணாமலை என்பது மரபு வழி நம்பிக்கை.

நம்பிக்கை எப்படியிருப்பினும் கடல் மட்டத்திற்கு 2668 அடி உயரமுள்ள இம்மலை அக்கினிப் பாறையின் குளிர்ச்சியில் வந்தது என்பது நிலவியலாளர் கருத்தாக உள்ளது. இங்கு இறைவன் நீள் ஒளியாய் நின்று அக்கினி மலையாய் குறுகிய அந்த மரபின் நினைவாக கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணா மலையின் உச்சியில் பத்தடி உயரமும் ஐந்தடி அகலமுமுள்ள செப்புக் கொப்பறையில் 6000 மீட்டர் துணி 3500 கிலோ நெய் மற்றும் கற்பூரம் ஆதியனவற்றையிட்டு அருட்ஜோதி எழ வைப்பர். இந்த தீப ஒளி 11 நாட்களுக்கு எரியும் எனவும் 35 கி.மீ தூரத்திற்கு தெரியும் எனவும் தென்னகத் திருக்கோயில்கள் தோற்றம் வளர்ச்சி என்னும் நூலில் நம்மூரவரான சுப்பிரமணியம் கந்தசுவாமி விளக்கம் தருகிறார். இந்தத் தீபமேற்றும் நேரத்தில் தமிழர் வீடுகளிலும் கோயில்களிலும் ஒளி சிந்தும் பெருவிழாவாக கார்த்திகை விளக்கீடு கொண்டாடப்படுகிறது.

அதே நேரத்தில் ஆணவத்தின் வழி தோன்றும் அடக்குமுறை ஒடுக்குமுறைகள் கொண்டு தமிழீழத் தாயக மண்ணை ஆக்கிரமித்து தமிழர் வாழ்வை வளத்தை பறித்து நிற்கும் சிங்கள பௌத்த மேலாண்மையிலும் அதன் வழி திணிக்கப்பட்ட யுத்தத்திலும் இருந்து தமிழீழ மக்கள் தங்கள் உயிரையும் உடலையும் மண்ணையும் மண்ணின் வளத்தையும் பாதுகாத்து மண்ணை மீட்கும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் தம் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் நினைவாக ஈகச்சுடரேற்றும் மாவீரர் தினம் கார்த்திகை 27ல் தேசியப் பெருவிழாவாகி நிற்கிறது.

தாயக கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே - இங்கு கூவிடும் எங்களின் குரலொலி கேட்குதா குழியினுள் வாழ்பவரே என தமிழீழ மக்கள் கார்த்திகை 27 நள்ளிரவு 12 மணிக்கு ஆலயங்கள் மணி ஒலிக்க ஊரெல்லாம் ஏற்றும் தீப ஒளியில் ஒளியாய் நின்றவர் தனை வழியாய்க் கண்டனர் தமிழர் என்பதை உலகு கண்டு கொள்கிறது.

அதே வேளை இருண்டு கிடந்த தமிழீழ மண்ணிற்கு ஒளியூட்டி வழிகாட்டி நிற்கும் தமிழீழத் தேசியத் தலைவன் இம் மண் மீதில் உதித்த பொன்னாளாக 26 கார்த்திகை 1954 அமைவுற்றதினால் உலகெல்லாம் வாழும் தமிழர் உள்ள ஒளி கொள்ளும் மாதமாகவும் கார்த்திகை வரலாற்றில் ஒளி வீசிகிறது. பிரபை என்றால் ஒளி கரன் என்றால் ஆற்றல் உடைவன் அவ்வகையில் பிரபாகரன் என்றால் இருளகற்றும் ஒளியினை வழங்கும் ஆற்றல் உள்ளவன் என்பது பொருள். தமிழர் விடுதலை ஒளியாய் இவ்வுலகு என்றும் போற்றி நிற்கும் ஒளியாய் பிரபாகரன் நிற்கின்றார். அவரை வழியாய்க் கண்டு நிற்கின்றார் தமிழர். இந்த உண்மையை தேசியத் தலைவரின் மாவீரர் உரை ஒலியும் -தாயகத்தின் மாவீரர் சுடர் ஒளியும் - கார்த்திகையில் உலகுக்கு உணர்த்திநிற்கிறது. விரைவில் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழீழக் கொடி பட்டொளி வீச - கார்த்திகை தீபமும் - மாவீரர் ஈகச்சுடரும் ஏற்றும் தமிழரை உலகு கண்டிட உழைத்திட வேண்டுமென்பதே கார்த்திகை மாதம் தமிழர்க்கு உரைக்கும் ஒளிச் செய்தியாக விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ABRA WHOLESALES LTD

**Unit 9P Kynoch Road, Eley Estate Edmonton N18 3BH**

- Toiletries
- Household Goods
- Stationery
- Gifts & Toys
- Mobile Phone Accessories
- Silk Flowers
- Medicines
- Soft Drinks
- Greeting Cards
- Novelty Sweets
- Video DVD & CDs
- Electrical

**Tel: 020 8887 9303**

**Fax: 020 8887 9304**


sales@abrawholesales.co.uk

**Opening hours**

Mon - Fri: 9.00 a.m. - 7.00 p.m.

Sat & Sun 9.30 - 3.30

Bank Holiday:9.30a.m. - 3.30p.m.




Open 7 Days a Week

**Free delivery**

**Open 7 days a week**

**Sales Area 21,000 Sq.ft.**

**Over 8,000 production in stock.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வரலாறு முடிவுறுமா?
# இலட்சியவாதங்கள் முற்றுப்பெறுமா?

## அறிமுகம்

வரலாறு முடிவுறுமா ? இலட்சிவாதங்கள் முற்றுப்பெறுமா? இதற்கான விடையினை இன்றைய உலகின் இருபெரும் சிந்தனையாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் எடுத்து நோக்கலாமென எண்ணுகின்றேன். அந்த வகையில் வரலாற்றின் முடிவும் இறுதி மனிதனும் என்னும் நூலில் புதிய சிந்தனைகளை முன்வைத்த பிரன்சிஸ் பியூகியூமா குறித்தும் இலட்சியவாதங்களின் முடிவு என்னும் நூலை எழுதிய டானியல் பெல் குறித்தும் இவர்களின் கருத்துக்கள் தோற்றுவித்த தாக்கங்கள் குறித்தும் இக்கட்டுரை எடுத்து ஆராய்கிறது

## 01. பிரான்சிஸ் பியூகியூஆமா
## **Francis Fukuyama(Born 1952)**






அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் (John Hopkins university) சர்வதேச அரசியல் பொருளாதாரத்தின் பேராசிரியரான பிரான்சிஸ் பியூகியூஆமா 1992ல் எழுதிய வரலாற்றின் முடிவும் இறுதி மனிதனும் (The End of History and the Last Man) என்னும் நூல் அரசியல் இலட்சியங்களைப் பொறுத்தவரை புதியதொரு சிந்தனைக்கு வித்திட்ட நூலாக அமைகிறது.

இந்நூல் 22 மொழிகளில் வெளியாகியுள்ளது. இவர் டானியல் பெல்லைப் போல இலட்சியவாதம் தேவையற்றது என்ற இருந்த போதிலும் சோவியத் ரஸ்யாவின் கலைப்பும் கிழக்கு ஐரோப்பிய தாராண்மை ஜனநாயகத்தின் தோற்றமும் என்றுமில்லாத அளவுக்கு தேசியங்கள் குறித்த விழிப்புணர்வுகளையும் தூண்டிவிட்டன. இதனால் புதிய தேசியத்தின் விழிப்பிலான யுத்தக்களங்கள் பலவற்றை இது தோற்றுவித்தது. இது வரலாறு முடிவடையாது புதிய வரலாறுகளைப் பிறப்பிக்கும் என்ற இயல்பு நிலைக்கு உதாரணங்களாக நிற்கின்றன.

அதே போல தாராண்மைவாத ஜனநாயகத்தின் எழுச்சி மதவழிச்சிந்தனைகளின் எழுச்சி மதஅடிப்படைவாதமாக மாறவும் செய்தது. இது அரசியல் இஸ்லாம் என்ற ஒரு இலட்சியவாதமாகப் பரிணாமம் அடைந்த நிலையில் அதனை மேற்குலக அரசியல் தனது இலட்சியவாதங்களுக்குச் சமானமான ஒன்றாக மதிக்க மறுத்தது. இதன் காரணமாக மேற்குலகிற்குப் பகைமை இலட்சியமாக இஸ்லாமிய அரசியல் பரிணமித்தது. இதனை பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற சுலோகத்துடன் அமெரிக்கா தலைமையில் மேற்குலக நாடுகள் வெல்ல முற்படுவதன் விளைவுகள் புதிய வரலாறுகளையும் வரலாற்றுத் தவறுகளையும் வளர்த்துச் செல்கிறது.

எனவே கைத்தொழில் பொருளாதாரத்தின் விளைவாகத் தோற்றம் பெற்ற செம்மைப் பொருளாதார காலத்தில் செம்மைத் தாராண்மைவாதம் (Classical liberalism) அக்கால மக்கள் எல்லாருக்குமான கவர்ச்சியான சமூக மறுமலர்ச்சியையும் நியாயமான சொத்துடமைப் பாதுகாப்பையும் அளித்ததினால் ஒவ்வொரு குடிமகனையும் கவர்ந்து நல்லதொரு சமுதாய அமைப்பை தோற்றுவித்தது போல இன்று உலகெங்கும் தாராண்மைவாத ஜனநாயகம் கொண்டுள்ள வெற்றியும் எல்லா மக்களுக்குமான நல்லதொரு சமுதாயத்தன்மையை தோற்றுவிக்கும் உடன்பாட்டை உருவாக்கும் பொழுது அதில் வரலாற்றை பிறப்பிக்கும் வளர்த்துச் செல்லும் காரணிகள் கரைந்து விடும் என்பது பியூகியூஆமாவின் நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆனால் முதலாளித்துவத்தில் எல்லாச் சமுகங்களினதும் ஆர்வத் தேவைகளை சமமாக மதித்து பூர்த்தி செய்யாதநிலை அதன் இயல்புநிலையாக இருப்பதினால் முதலாளித்துவ மேலாண்மையில் பிறப்பிக்கப்படும் எந்தப் புதிய அரசியல் வடிவும் போலியான உணர்வுள்ள சமத்துவத்தை தான் ஏற்படுத்தும். இதனால் வாழ்வுக்கான போராட்டங்கள் வரலாற்றின் கிளைகளாகத் தொடர்ந்து செல்லுமே தவிர வரலாற்றின் முடிவையோ அதன் இறுதி மனிதனையோ உலகு தற்காலிகமாகத் தான் சந்திக்கும் என்பதே வெளிப்படையான உண்மை.

இந்நேரத்தில் உலகின் அரசியல் தத்துவங்கள் வரலாற்றின் பரிணாமத்தை எவ்வாறு பார்க்கின்றன என நாம் தெரிந்து கொள்வதும் நல்லது. தாராண்மைவாதிகள் (liberals) வரலாற்றை அறிவையும் விளக்கத்தையும் பெறுவதினால் ஒவ்வொரு சந்ததியும் முன்னர் இருந்த சந்ததியை விட உயர்வான நிலைக்குச் செல்வதற்கு எடுக்கும் முயற்சிகளைப் பதிவுசெய்யும் தன்மையானதாகப் பார்க்கின்றனர். அதேவேளை இந்த மாற்றம் படிப்படியான படிமுறை வளர்ச்சிகள் ஊடான சீர்திருத்தங்களால் ஏற்பட வேண்டுமே தவிர புரட்சியால் உருவாக கூடாது என்பது தாராண்மைவாதிகளின் உறுதியான நம்பிக்கை.

பழமைவாதிகளைப் (Conservatives) பொறுத்த மட்டில் வரலாறு என்பது பாரம்பரியங்களின் தொடர்ச்சி. மிகச் சிறிய அளவிலான மாற்றங்களே வரலாற்றில் ஏற்படும். நேற்றைய பாடங்கள் இன்றைய செயற்பாட்டுக்கும் நாளைய வாழ்வுக்கும் வழிகாட்டும். பழமைவாதத்தில் பற்றுறுதி மிக்கவர்கள் (Reactionary) வரலாறு வீழ்ச்சிகளை வெளிப்படுத்துகிறது எனவும் முன்னைய உன்னதங்களை விரும்பிய காலத்துக்குள் மீளப் பெறுவதற்கு தூண்டுகிறது எனவும் கருதுகின்றனர்.

சோசலிஸ்டுகளைப் ( Socialists) பொறுத்த மட்டில் வரலாறு என்பது சமுகத்தினதும் தனிமனிதனதும் அபிவிருத்திகளைப் புரிந்து கொள்வதற்கான பதிவாக உள்ளது. மார்க்சினுடைய தத்துவத்தின் அடிப்படையில் வர்க்க முரண்பாடுகள் தான் வரலாற்றின் செல்நெறியாக உள்ளது. அதனால் வர்க்க முரண்பாடுகளற்ற பொதுவுடமை சமுதாயத்தின் தோற்றத்தின் பொழுது தான் வரலாறும் வளர்ந்து செல்லாது முடிவடையும் என்பது சோசலிஸ்டுகளின் நம்பிக்கை.

பாசிஸ்டுகளைப் (Fascists) பொறுத்த மட்டில் வரலாறு என்பது கடந்த காலத்தில் நிலவிய பொற்காலம் மாறுபட்டவிதத்தையும் ஏற்பட்ட வீழ்ச்சிகளையும் விபரிக்கும் ஒன்று. இதனால் நடைமுறையில் பொற்காலத்தின் வீழ்ச்சிகளுக்கு காரணமாக இருந்த சக்திகளுடன் வன்முறையான யுத்தத்தின் மூலமே தேசியத்தின் மறுபிறப்பையும் புதிய சந்ததி எழுச்சியையும் உருவாக்கும் வரலாற்றுச் சுழற்சியை ஏற்படுத்தலாம் என்பது இவர்களின் நம்பிக்கை.


மதஅடிப்படைவாதிகளைப் (Religious Fundamentalists) பொறுத்த வரை வரலாறு குறித்த தெளிவற்ற பார்வையைக் கொண்டிருக்கின்றனர். ஒருவகையில் இன்றைய வரலாறு நேற்றைய இலட்சியமான வரலாற்றை விட அறத்திலும் ஆன்மீகத்திலும் ஊழல்தன்மைகளைக் கொண்டதாக உள்ளது என்று கருதுகின்றனர். ஆயினும் இந்நிலை எதிர்காலத்தில் சமுக எழுச்சியூடாக மாறும் என்பது இவர்களின் நம்பிக்கை. இதனால் இவர்கள் பழமைவாதிகளைப் போல வரலாற்றை பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக ஏற்றுக் கொள்வதில்லை.

இவ்வாறாக வரலாற்றை ஒவ்வொரு அரசியல் இலட்சியவாதிகளும் தங்கள் அரசியல் சார்புநிலைகள் ஊடாகவே பார்க்கின்றனர். இந்நிலையில் பிரான்சிஸ் பியூகியூஆமா அவர்கள் 1992ல் எழுதிய வராற்றின் முடிவும் இறுதி மனிதனும் என்பது அவரின் அமெரிக்க வாழ்வின் பின்னணியில் உருவான விளக்கமாக உள்ளது. இவர் தொடர்ந்து சமுக தகுதிகளும் முன்னேற்றத்தை உருவாக்கலும் (The Social Virtues and the Creation of Prosperity (1995), மிகப்பெரிய குறுக்கீடு : மனித இயல்புகளும் சமுக ஒழுங்கை மறுபடி அமைத்தலும் ( The Great Disruption: Human Nature and the Reconstitution of Social Order (1999), எங்களது மனிதத்துவத்திற்கு பின்னாலான எதிர்காலம் : தொடர்ச்சியான உயிரியல் தொழில்நுட்ப புரட்சிகள் (Our Posthuman Future: Consequences of the Biotechnology Revolution (2002), அரசைக் கட்டி எழுப்புதல் : 21வது நூற்றாண்டில் ஆள்பவர்களும் உலக ஒழுங்கும் State-Building: Governance and World Order in the 21st Century (2004) ஆகிய நூல்களை எழுதி இன்றைய காலத்தின் அமெரிக்க வாழ்வின் பின்னணியிலான தனது அரசியல் சிந்தனைகளை வெளிப்படுத்தி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 02. டானியல் பெல்
## (Daniel Bell (Born 1919 )






இலட்சியவாதங்களின் முடிவு (The End of Ideology –1960) முதலாளித்துவத்தின் கலாச்சார முரண்பாடு ( The Cultural Contradictions of Capitalism) ஆகிய நூல்களின் மூலமும் 1960களில் ஐர்விங் கிரிஸ்டல் (Irving Kristol) உடன் இணைந்து பொதுமக்களின் ஆர்வங்கள்(The Public Interest ) என்னும் சஞ்சிகையை நிறுவி வெளியிட்டதன் மூலமும் நவீன சமுகம் குறித்தும் அது அரசியல் மேல் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்தும் பல்கலைகழகமட்டத்தில் எடுத்து விளக்கியவராக ஹவார்ட் பல்கலைக்கழக சமுகவியல் பேராசிரியர் டானியல் பெல் விளங்குகின்றார்.

1950கள் 60களில் வளர்ந்து வந்த இலட்சியவாதங்கள் முடிவுக்கு வந்துவிட்டன என்ற கருத்தின் பிரதிநிதியாக டானியல் பெல் காணப்படுகின்றார். இரண்டாவது உலகயுத்தத்தின் பின்னர் மேற்குலக நாடுகளின் அரசியல் பெரிய அரசியல் கட்சிகளிடை இலட்சியவாதப் பிரிவினைகளும் இலட்சியங்கள் குறித்த வாதப்பிரதிவாதங்களும் இல்லாது கட்சிகளுக்கு இடையிலான பரந்த அளவிலான உடன்பாடுகளுடன் வளர்ந்து வந்தமை டானியல் பெல்லை வெகுவாகக் கவர்ந்து கொண்டது. இந்த தன்மை காரணமாக பொதுவுடமைவாதமும் பாசிசவாதமும் செயலிழந்து போக மற்றைய கட்சிகளிடை பொருளாதார வளர்ச்சியையும் பொருளியல் எழுச்சிகளையும் எவ்வாறு சிறந்த முறையில் வழங்கலாமென்பதிலும் எந்தக்கட்சி இந்த வழங்கலில் முதன்மை வகிக்கலாமென்பதிலுமே உடன்பாடின்மைகள் காணப்பட்டன. இதனால் நல்ல சமுதாயம் ஒன்றை உருவாக்க செல்வத்தை எவ்வாறு வழங்கலாமென்கிற தொழில்நுட்ப கேள்விக்கு விடை காணும் தளமாக அரசியலின் பரப்பளவு சுருங்கி விட்டது. இந்நிலையில் இலட்சியங்கள் குறித்து அறிய விவாதிக்கவேண்டிய எல்லாவிதமான போக்குகளும் தேவையற்றதாகிவிட்டது என்பது டானியல் பெல்லின் வாதம். இந்த அடிப்படையில் இந்த இலட்சியங்களை எல்லாம் ஆராய்ந்து நடக்க வேண்டிய பாரிய அரசாங்கம் (Big Government) ஒன்றின் அவசியமும் இல்லாது போகிறது என்ற டானியல் பெல்லின் கருத்து தற்காலப் பழமைவாத (Neo Conservatism) வளர்ச்சிக்கு பல்கலைகழக மட்டத்திலான மதிப்பினைப் பெற்றுக் கொடுத்தது. 1960ம் ஆண்டில் வெளிவந்த இலட்சியவாதங்களின் முடிவு (The End of Ideology –1960) சமுக அரசியல் பிரச்சினைகளில் காரணங்களை விளக்கும் (Rationalist) வகையிலான முயற்சிகள் அடைந்த சோர்வினை விளக்கியது. ஆனால் 1988ல் வெளிவந்த இலட்சியவாதங்களின் முடிவு (The End of Ideology –1988) பதிப்பில் டானியல் பெல் பூரணமான சமுதாயம் ஒன்றை அல்லது இலட்சியங்கள் அனைத்தும் பூரணத்துவம் அடைந்த சமுதாயமொன்றை அமைத்தல் என்ற கற்பனா அரசை (Utopian end states) அமைத்துக்கொள்ளலாமெனக் கருதுவதும் ஒரு கொடுங்கோன்மை (Tyranny) ஆட்சிக்கே இறுதியில் இட்டுச்செல்லும் என எச்சரிக்கவும் செய்தார். இதனால் இவர் இலட்சியவாதங்கள் குறித்த விவாதங்களைத் தற்காலிகமாக நிறுத்திக்கொள்ளல் பாரிய கட்சிகளுக்கு இடை இலட்சியங்கள் குறித்த பரந்த இணக்கப்பாடுகள் ஏற்பட வழிபிறக்கும் என்ற நம்பிக்கையை தனது எழுத்துக்களில் வெளிப்படுத்தினார். யுத்த காலத்திற்குப் பின்னர் மேற்குலகின் அரசியல் இலட்சியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று இலட்சியங்களான தாராண்மைவாதம் சோசலிசம் பழமைவாதம் (Liberalism – Socialism-Conservatism) ஆகிய மூன்றும் முதலாளித்துவத்தை கட்டுப்படுத்தி நிர்வகித்தல் (Managed Capitalism) என்னும் பொது இலக்கை ஏற்றுக்கொண்டன. இந்தப் போக்கு கூட ஒருவகையில் ஒரு புதிய அரசியல் இலட்சியமென்றே கொள்ளவேண்டியுள்ளது. இந்த இலட்சியம் கூட சந்தைப் பொருளாதாரத்திலும் தனியார் சொத்துடமையிலும் நம்பிக்கை கொண்ட சமுகநலங்களைப் பேணுதல் பொருளாதாரத்தில் தலையீடுகள் என்பவற்றைக் கண்டு ஆத்திரப்படுகிற தன்மையுள்ளதாக அமைகிறது. இதனை 1960களில் முதலாளித்துவ இலட்சியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தோற்றுவித்த நலம்பேணும் முதலாளித்துவம் (Welfare Capitalism) சமுதாய ஜனநாயகம் (social democracy) என்ற வெற்றிகரமான இலட்சியங்களின் கலவையாகத் தான் பார்க்க வேண்டியுள்ளது. இதனால் இலட்சியங்களின் முடிவு என இதனை டானியல் பெல் வர்ணிப்பதை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாமென்பது கேள்விக்குரியாகவே இருக்கிறது. அத்துடன் 70களில் வளர்ச்சியுற்ற புதிய அறிவுசார் இடதுசாரிக் கருத்துக்களையோ அல்லது அதன் வழி வலுப் பெற்றுள்ள பெண்மைவாதம் (Feminism) உலகச் சூழல்பேணல் (ecologism) போன்ற இன்றைய உலகின் அரசியல் இலட்சியங்களின் பரிமாணங்களையோ டானியல் பெல்லின் சிந்தனைகளின் அடிப்படையில் விளங்கிக்கொள்ளுதல் கடினம். அவ்வாறே கைத்தொழிலாக்கத்திற்கு பின்னரான யுகம் (Post Industrialism) என்பதை வலுப்படுத்தும் டானியல் பெல் தகவல் சமுதாயம் (Information Society) ஒன்று தோன்றி அறிவுசார் வர்க்கமொன்றால் மேலாண்மை செய்யப்படுகிறது என்பதை தெளிவாக விளக்கியுள்ள டானியல் பெல் ரஸ்யா சீனா கியூபா போன்ற நாடுகளில் அரசுக்களின் செல்நெறியாக அமைந்த பொதுவுடமைவாதம் அதன் வழி ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் தோற்றுவித்த புரட்சிகர அரசியல் சிந்தனைகள் இயக்கங்கள் என்பவற்றின் இலட்சியவாதத் தன்மைகளை ஏறெடுத்தும் பார்க்காது விட்டமை இவருடைய சிந்தனைகளை பழமைவாதத்தின் புதிய வடிவம் (Neo conservatism) ஆகவே பார்க்க வைக்கிறது. மேலும் நீண்ட காலமாக கவனிப்பாரற்று விடப்பட்டு இருந்த சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தின் பொறிமுறைகள் குறித்த புதிய தரிசனங்களை வலதுசாரிக் கொள்கையாளர்களும் மேற்கொள்ள வேண்டிய ஒரு தேவையினை 1970களில் ஏற்பட்ட பொருளியல் வேலையின்மை (economic recession) ஏற்படுத்தியது இதனை 1960கள் முதல் செய்த ஆற்றலுள்ள சமூகவியல் கட்டுரையாளராக பேராசிரியராக டானியல் பெல் விளங்குகிறார். சுருக்கமாகச் சொல்வதானல் உற்பத்தியையும் முதலாளித்துவத்தையும் பேணுகின்ற இன்றைய உலக அமைப்பில் அதனை ஆற்றலுள்ள முறையில் பேணுவதற்கும் அதற்கான அறிவார்ந்த விளக்கங்களை தோற்றுவிப்பதற்கும் இடையில் உள்ள உரசல்களைக் குறித்த சிந்தனையாக டானியல் பெல்லின் சிந்தனைகள் அமைகின்றன. இந்த உள் நோக்குடன் இன்றைய மேற்குலக மனிதனின் உணர்வுகள் தனிப்பட்ட செயற்பாடுகள் திருப்பதிநிலைகள் சுயவிளக்கங்கள் என்பன குறித்த பரந்த பார்வையாக டானியல் பெல்லின் படைப்புக்கள் பரிணமித்துள்ளன.

## முடிவுரை

வரலாறு குறித்தும் இலட்சியவாதம் குறித்தும் இன்றைய உலகின் இருமுக்கிய மூத்தாளர்களின் பார்வையை முன்வைத்தோம் இவை குறித்து உங்கள் சிந்தனையினை தூண்ட வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கம். சிந்தியுங்கள் வரலாறு என்றால் என்ன அது தொடரவேண்டுமா? தொடருமா? இலட்சிய வாதங்கள் தேவையா? நிலைக்குமா? இலட்சியங்கள் வரலாற்றை உருவாக்கும் காரணிகளாகும் பொழுது வரலாறு வளர்கிறது. இலட்சியங்கள் நிலைக்கிறது. எனவே இரண்டுமே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்பதே உண்மையாக உள்ளது. இலட்சியங்கள் இன்றேல் வரலாறு இல்லை. வரலாறு இன்றேல் இலட்சியங்களில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரச சார்பற்ற நிறுவனங்களும் அதன் இயக்கத்தன்மைகளும்

## அறிமுகம்

அரசசார்பற்ற நிறுவனங்கள் என்னும் அமைப்புக்களையும் அதன் இயக்கத்தன்மைகளையும் விளங்கிக் கொள்வது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது. இதனை மையமாக வைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும் அதன் இயக்கத்தன்மைகளும் என்னும் இக்கட்டுரை அமைகிறது. சர்வதேச மனிதாய உதவிகளை நெறிப்படுத்துவதிலும் வழங்குவதிலும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் கடந்த கால் நூற்றாண்டுகளாக முக்கிய பங்கினை வகிக்கின்றன. அதிலும் 1989ம் ஆண்டுக்குப்பின்னர் யுத்தங்கள் முரண்பாடுகள் காணப்பட்ட இடங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மட்டுமல்லாது அரசசார்பற்ற நிறுவனங்களும் மனிதாய உதவிகளில் ஈடுபடும் தன்மை பெருவழக்காக்கப்பட்டதை அடுத்து அரசசார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச அரசியலில் பங்கேற்கும் சர்வதேசப் பங்காளர்களாக விளங்குகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாய உதவிகளுக்கான அலுவலகம் (OCHA) 260 மேற்குலக அரசசார்பற்ற நிறுவனங்களையும் அவற்றின் கூட்டமைப்புக்களையும் சர்வதேச மனிதாய உதவிகளில் ஈடுபடுவனவாகப் பதிவு செய்துள்ளது. இந்த தொகையில் அபிவிருத்திக்கு மட்டும் என்று இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களும் குறிக்கப்பட்ட அவசரத் தேவைகளுக்கு என முளைவிடும் பிரீவ்கேஸ் (briefcase) நிறுவனங்களும் உள்ளடக்கப்படவில்லை. அதே வேளை லின்டன்பேர்ஜ் அன்ட் பிரையன்ட் (Lindenberg and Bryant 2001 ) 1980க்கும் 1990க்கும் இடையில் உலகின் வடக்குப் பகுதியின் அரசசார்பற்ற நிறுவனங்களின் தொகை 1600இலிருந்து 2500ஆக அதாவது கிட்டத்தட்ட இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதெனத் தெரியவருகிறது.

ஸ்டொட்டார்ட் போர்மன் (Stoddard and Forman 2002) ஆகியோரின் ஆய்வின்படி இன்று 3000க்கும் 4000க்கும் இடையிலான அரசசார்பற்ற நிறுவனங்கள் அபிவிருத்தி நிவாரணங்கள் சமூக நிறுவனங்கள் என்ற தளங்களில் இயங்குவதாக அறிய முடிகிறது. அரசசார்பற்ற நிறுவனங்களில் 57 வீதம் ஐரோப்பாவிலும் 33வீதம் அமெரிக்காவிலும் 10வீதம் மற்றைய நாடுகளிலும் உள்ளன ( HPG14, 2003:25). ஆனாலும் அமெரிக்காவின் அரசசார்பற்ற நிறுவனங்களும் – அமெரிக்காவின் ஏதோ ஒருவகைக் கூட்டிணைப்புடன் அல்லது தனித்து இயங்கும் ஐரோப்பிய அரசசார்பற்ற நிறுவனங்களும் – "அரசசார்பற்ற நிறுவனங்கள்" எனத் தங்களை அழைத்துக் கொண்டாலும் இவைகளுக்கு ஊடாகவே சர்வதேச அரசாங்கங்களும் சர்வதேச அமைப்புக்களும் நிதிகளை உதவிகளுக்கும் செயற்திட்டங்களுக்கும் வழங்குவதினால் இவைகளும் அரசியலில் பங்கேற்றுக்கும் நடைமுறைத்தன்மையினைக் கொண்டனவாகவே விளங்குகின்றன.

உதாரணமாக 2000ம் ஆண்டில் அமெரிக்காவின் நிவாரணங்களுக்கும் அபிவிருத்திக்குமான 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களில் காற்பங்கு CARE, CRS, Save the Children, World Vision ஆகிய நான்கு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாகவே வழங்கப்பட்டு உள்ளன. ( USAID 2000). அவ்வாறே டென்மார்க் அரசாங்கத்தை எடுப்பின் அதன் மனிதாய உதவிகளுக்கான நிதியில் 36 வீதம் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாகவே வழங்கப்பட்டு உள்ளது. பிரான்சின் நிலையும் அவ்வாறே 40 வீதமான உதவிகளை பிரான்ஸ் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாகவே வழங்கியுள்ளது. Oxfam க்கு பிரித்தானியா 39 வீதமும் நெதர்லாந்து (Dutch) 36 வீதமும் நிதியளிப்பு செய்கின்றன. Save the Children க்கு பிரித்தானிய கிளைக்குப் பிரித்தானிய அரசாங்கம் 35 வீதமும் அமெரிக்கக் கிளைக்கு அமெரிக்க அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

32 வீதமும் நிதிவழங்கல் செய்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகள் கூட அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாகவே பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. 2000ம் ஆண்டில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளர் அலுவலகம் தனது 44வீதமான உதவிகளை அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவே வழங்கியுள்ளது. (HPG Report 14, 2003:25). இவ்வாறாக அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுத் தளங்கள் அரசாங்கங்களின் கைகளில் இருப்பதினால் அரசசார்பற்ற நிறுவனங்களும் சமகால அரசியல் போக்குகளுக்குள் உட்பட்டு செயற்படுகின்றனவே தவிர அவை முற்றிலும் மனிதாயப் பணிகளை செய்யவில்லை என்ற அரசியல் யதார்த்தத்தினை விளங்கிக்கொள்வது அவசியம்.

## அரசசார்பற்ற நிறுவனங்களின் மூவகையான மரபுநிலைகள்

இன்றைய அரசசார்பற்ற நிறவனங்கள் மூன்றுவகையான மரபுநிலைகளில் தோன்றியுள்ளன. முதலாவது கத்தோலிக்க சமயத்தின் கடவுளை அரசை போதித்தல் என்ற கருத்தியலின் பின்னணியில் தோற்றம் பெற்றவை. Caritas CAFOD CRS போன்றவை இவ்வகையினைச் சார்ந்தவை. இருந்தபோதிலும் நற்செய்தியை ஏற்க வைத்தல் என்பதோ மறைபரப்புதல் என்பதோ இந்த கத்தோலிக்க நிறுவனங்களின் நோக்கமாக அமையவில்லை. அதற்கு மாறாக கடவுளின் அரசை நிறுவுகின்ற செயற்பாடுகள் என்று சொல்லப்படுகிற தன்னைப் போல தன் அயலவனையும் நேசிக்கும் பண்பின் பயிற்சித்தளமாகவும் கிறிஸ்தவத்திற்கும் கிறிஸ்தவமல்லாத மற்றைய மதத்தினர்க்கும் இடை சேவை மூலம் புரிந்துணர்வுகளை தோற்றுவித்து மதங்களுக்கிடையில் நல்லுறவுகளை ஏற்படுத்தும் மதங்கடந்த செயற்திட்டமாகவுமே இந்த வகையான அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிகள் அமைந்தன.

பின்னர் சீர்திருத்தக் கிறிஸ்தவத்தின் தோற்றத்தின் மூலம் மற்றைய திருச்சபைகளும் தமக்கான இவ்வகைச் சேவை அமைப்புக்களைத் தோற்றுவித்தன. World Vision, Christian Aid போன்ற இச் சீர்திருத்தக் கிறிஸ்தவர்களின் அரச சார்பற்ற அமைப்புக்கள் எந்த ஒரு நிறுவனப்பட்ட திருச்சபையினதும் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் தாங்கள் சேவையாற்றாது சீர்திருத்த கிறிஸ்தவக் கருத்தியலுடாக வளர்ச்சி பெற்ற ஆனால் சார்புத்தன்மையற்று எல்லைகளைக்கடந்து பணியாற்றும் trans denominational நிறுவனங்களாகத் தங்கள் சேவையை ஏற்க விரும்பிய எல்லா மத இன மக்களுடனும் இணைந்து சேவை செய்யும் தன்மையினராகத் திகழ்ந்தனர். இவ்வாறு சில இஸ்லாமிய நிறுவனங்களும் இஸ்லாமிய மதத்தின் கருத்தியலில் வளர்ச்சி பெற்று மதமாற்றத்தை வலியுறுத்தாது மனித விழுமியங்களுக்காக மனிதாயப் பணி செய்தன. Aga Khan Foundation, Islamic Relief போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். எனவே மதங்களின் கருத்தியலில் வளர்ச்சி பெற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் முதலாவது மரபுநிலையாகக் கொள்ளப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இரண்டாவது மரபுநிலை டன்ஆன்டிஸ்ட் (Dunantist) என்றழைக்கப்படுகிறது. 1859ல் ஒஸ்ரியன்சை (Austrians) இத்தாலியில் இருந்து விரட்டவென நெப்போலியன் நடாத்திய சொல்பேர்னியோ (Solferino) யுத்தத்தில் நேரடியாகப் பங்கேற்ற ஜீன் ஹென்றி டன்ஆன்ட்ஸ் **Jean Henri Dunant**s (May 8, 1828-October 30, 1910) அந்தப் பயங்கர யுத்தத்தில் காயப்பட்ட பாதிப்புற்ற மக்களின் நிலையினால் ஈர்க்கப்பட்டு சொல்பேர்னியோ *Un Souvenir de Solférino* [*A Memory of Solferino*], என்னும் நூலை எழுதினார். இந்த நூலில் தான் யுத்தமுனைகளில் காயமடையும் கைதிகளாகும் மனிதர்களை மனிதாயத்துடன் மனித மாண்புடன் நடத்த வேண்டும் என்னும் கோரிக்கையும் திட்டமும் முன்வைக்கப்பட்டது. இதன் பின்னணியில் டன்ஆன்டிஸ்ட் தொடங்கிய அமைப்புத்தான் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம். ஆனால் டன்ஆன்டிஸ்ட் யாராலுமே தேடப்படாத மனிதராக வங்குரோத்து நிலைக்குச் சென்று 1875 முதல் 1890 வரை ஒதுக்கப்பட்ட வாழ்வினை அனுபவித்தார். பின்னர் 1890ல் கிராம ஆசிரியர் ஒருவரால் அவர் அடையாளம் காணப்பட்ட பின்னர் அவருக்கு பரிசுகளும் பெருமதிப்புகளும் உலகு வழங்கிய போதிலும் அதில் உள்ள போலித்தனத்தை உணர்ந்து அவை எதனையுமே ஏறெடுத்துப் பார்க்காது உலகில் உள்ள பரம ஏழைகளில் ஒருவராகவே தானும் மரணித்து தனது உடலையும் எவ்வாறு மற்றைய ஏழைகளை நாயைக் கொண்டு சென்று புதைப்பதுபோல புதைககிறார்களோ அவ்வாறு சிறப்பான மரணச்சடங்கு கூட இன்றி புதைக்க வைத்து உலகின் ஏழையின் வாழ்வு எவ்வாறு உள்ளது என்ற யதார்த்தத்தை தனது வாழ்வால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெளிப்படுத்திய மாபெரும் மனிதாயச் செம்மல் டன் ஆன்டி ஸ்ட். இவரின் முயற்சியால் செயற்படத் தொடங்கிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அரசசார்பற்ற அமைப்பு என்கிற நிலை மட்டுமல்லாமல் சட்டபூர்வமாக யுத்தக்களங்களில் இறங்கி மனிதாயத்தின் மாண்பினைப் பேணும் செயல்களைச் செய்யும் சர்வதேச சட்ட உரிமையும் உண்டு. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தோற்றுவித்த சட்டங்களை ஒட்டி வேறு துறைகளிலும் செயற்படத்தொடங்கிய Save the Children, Oxfam, MSF போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களை டன்ஆன்டி ஸ்ட் மரபுநிலையினைச் சார்ந்தவை என்பர். இன்று MSF யுத்த சூழலில் தவிப்பவர்களின் ஆரம்ப மருத்துவப் பாதுகாப்பு மருத்துவ உதவி என்பவற்றிலும் Oxfam குடிதண்ணீர் சுகாதாரம் ஆகிய பிரச்சினைகளை ஈடுசெய்வதிலும் Save the Children குழந்தைகளின் நலன்களிலும் துறைசார் சிறப்பினை இந்நிறுவனங்கள் பெற்றுள்ளன.

மூன்றாவது வகை அரசசார்பற்ற நிறுவனங்கள் வில்சனியன் (Wilsonian) மரபுநிலையைச் சார்ந்தவை. சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் தந்தையெனப்படும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி (Woodro Wilson ) வூட்ரோவில்சன் அமெரிக்காவின் விழுமியங்களையும் செல்வாக்கினையும் உலகினுக்கு நன்மைகள் செய்யும் சக்தியாக மாற்றல் வேண்டுமென்று கூறியதை மையமாக வைத்து அமெரிக்காவில் தொடக்கம் பெற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த வில்சனியன் மரபுநிலையினைச் சார்ந்தவை. (HPG Report 14, 2003:27-28). இரண்டாவது உலகயுத்தத்தின் பின் அமெரிக்க இராணுவத்திடம் மேலதிகமாக இருந்த உணவுப் பொதிகளை ஐரோப்பாவில் யுத்தத்தால் பாதிப்புற்ற தேசங்களுக்கு வழங்கத் தொடங்கப்பெற்ற மார்சல் திட்டத்தை (Marsahall Plan) நடைமுறைப்படுத்த ஆரம்பமான CARE அரசசார்பற்ற நிறுவனம் இதன் தலையாய பிள்ளை. டச்சு தேசத்து அரசசாப்பற்ற நிறுவனங்களுக்கு டச்சு அரசாங்கம் தன்னுடைய தாராண்மைவாத அரசியலை பரப்பும் நோக்கில் தாராளமாக நிதியளிப்புச் செய்வதினால் டச்சு அரசசார்பற்ற நிறுவனங்களையும் வில்சனியன் மரபுநிலைத் தன்மை கொண்ட அரசசார்பற்ற நிறுவனங்களாகவே பார்க்க வேண்டுமென்பது ஓமாலி டெஜூசீல் (O'Malley and Dijkzeul 2002) லின்டன்பேர்ஜ் அன்ட் பிரையன்ட் (Lindenberg and Bryant 2001 ) போன்ற ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

**References :**


Joanna, M and Adele, H (ed)., ( 2003) HPG Report, Odi.

Forman, S. and A. Stoddard (2002) ' International Assistance' in L.Salamon(ed)., *'The state of Nonprofit America'* Washington DC: Brookings.

Lindenberg, M and C. Bryant (2001) *Going Global: Transforming Relief and Development* NGOs. Bloomfield, CT:Kumarian.


O'Malley, S. and D. Dijkzeul (2002) ' A Typology of International Humanitarian Organizations', paper prepared for the International Expert Conference 'Security and Humanitarian Action: Who is Winning? A US-Europe Dialogue in the Wake of September 11' Columbia University, 24-25.


## வறுமை – புதியதோர் விளக்கம்

வறுமை என்றதும் பணப்பற்றாக்குறை தான் பலருக்கும் நினைவுக்கு வரும். பணப்பற்றாக்குறை வறுமையின் வெளிப்பாட்டு வடிவம். உண்மையில் வறுமை என்பது நோபேல் பரிசு பெற்ற கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்துப் பொருளியல் பேராசிரியர் அமர்தியா சென் (AMARTYA SEN) ன் கருத்துப்படி ஒரு மனிதன் தன்னுடைய திறமைக்கு ஏற்ற படிப்பையோ அல்லது கல்வித் தகுதிக்கேற்ற வேலையையோ பெறமுடியாத முறைமைகள் சமுதாயத்தில் காணப்படும் நிலையாகும் என்கிறார். இந்த அமர்த்தியா சென்னின் கருத்து மிக முக்கியமானது இவரே இன்று சர்வதேச அமைப்புக்களும் அரசாங்கங்களும் வறுமைக்கோட்டின் அடிப்படையில் நாடுகளின் வறுமையை அளவிடும் முறையை 1983ல் அறிமுகம் செய்தவர். வறுமைக்கோட்டில் ஒருவருடைய வருமான அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும் அதனுடன் சேர்த்து அந்த வறுமைக்கு காரணமாக இருக்கிற சமூக பொருவாதார தன்மைகளான வேலைவாய்ப்பு கல்வி மருத்துவசதிகள் போன்றனவற்றின் சுட்டிகளும் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. இதற்கு காரணம் வறுமைக்கு இருவகையான வரைவிலக்கணம் கொடுக்கப்படுகிறது. ஒன்று முழுமையான வறுமை. இதனை ஆங்கிலத்தில் absolute poverty என்று கூறுவார்கள். மற்றையது சார்புத்தன்மையான வறுமை. இதனை ஆங்கிலத்தில் Relative Poverty என்று கூறுவார்கள். வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை முழுமையான வறுமை என்று அழைக்கப்படும். உணவு தங்குமிடம் ஆடைகள் போன்றவை இதில் அடங்கும். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் இந்த முழுமையான வறுமை நலன்புரி அரசாங்கங்கள் தோன்றுவதற்கு முன்னர் இருந்தது. ஆனால் இன்று முழுமையான வறுமையின் தொட்டில்களாக மூன்றாம் உலக நாடுகளே திகழ்கின்றன. சார்புத்தன்மையான வறுமை என்பது ஒரு மனிதன் குறிக்கப்பட்ட காலத்தில் ஒருநாட்டில் காணப்படும் சாதாரண வாழ்க்கையில் தனது விருப்புக்கேற்ப பங்கேற்பதற்கு அவனுடைய மூலவளங்கள் பற்றாக்குறையாக இருக்கும் நிலையாகும். உதாரணமாக உங்களுடைய வேலை அல்லது படிப்புக்கு செல்வதற்காக சமைக்கப்பட்ட உணவை வாங்க நீங்கள் விரும்பலாம் ஆனால் அவ்வாறு சமைக்கப்பட்ட உணவை வாங்க வசதியில்லாத நிலை இருக்குமானால் நீங்கள் சார்புத்தன்மையான வறுமையில் இருக்கின்றீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இன்றைய நூற்றாண்டின் மனிதன் யார்?




றீற்றா பற்றிமாகரன் – றங்ஹா பாலசுப்பிரமணியம்
ஐ பி சி வானலையில் வழங்கிய உரைச்சித்திரம்

யார் இன்றைய நூற்றாண்டின் மனிதன் என்னும் சிறப்பைப் பெற்றுள்ளான். இன்றைய நடைமுறை உலகு உங்களிடம் எழுப்புகிற கேள்வி இது. ஆனால் இதற்கான பதிலைக் கூறுவது சற்றுக் கடினம் தான் ஏனென்றால் எத்தனையோ விந்தைகள் எத்தனையோ சாதனைகள் இன்றைய உலகின் நடைமுறையாக உள்ளது. இந்நிலையில் யாரை இந்த நூற்றாண்டின் மனிதனெனக் கூறுவது மிகமிகச் சிரமமான ஒன்று தான். இதற்காக உங்களுக்கு ஒரு உதவி செய்யலாமெனத் தோன்றுகிறது. அந்த மனிதன் கூறிய மகத்தான வாழ்க்கை உண்மை ஒன்றைக் கூறுகிறேன். அதன் பின்னாவது யார் இன்றைய நூற்றாண்டின் மனிதனெனக் கண்டுபிடிக்க முடிகிறதா? முயன்று பாருங்கள்.

கற்பனை செய்தல் என்பது பலருக்குப் பிடிக்காத ஒன்று. சும்மா அதையும் இதையும் கற்பனை செய்து கொண்டிருக்காது ஒழுங்காய்ப் போய்ப் படி என்பது பல பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கூறும் அறிவுரை. ஆனால் கற்பனை செய்தல் அறிவை விட முக்கியமானது Imagination is more important than knowledge என்ற தத்துவத்தைக் கூறிய மனிதன் தான் இந்த நூற்றாண்டின் மனிதன் என்னும் சிறப்பைப் பெறுகிறான். சரி கண்டு பிடித்தீர்களோ இல்லையோ நான் விடையைக் கூறுகிறேன் கேளுங்கள்.

கற்பனை செய்தல் அறிவை விட முக்கியமானது என்று வாயளவில் மட்டும் கூறுவதுடன் நின்று விடாது அந்தத் தனது கற்பனைத் திறத்தைக் கொண்டே அதுவரை உண்மை என நம்பப்பட்டு வந்த பல விஞ்ஞான உண்மைகளை பொய்யானது எனக் காட்டி இன்றைய விஞ்ஞான உலகின் புதிய பரிமாணத்திற்கு வித்திட்ட மாபெரும் அறிவுலக மேதை அல்பிரட் அயன்ஸ்டின் தான் இன்றைய நூற்றாண்டின் மனிதன்.

1879 முதல் 18 ஏப்ரல் 1955 வரை வாழ்ந்த இந்த மாமனிதன் 1905ம் ஆண்டிலே உருவாக்கிய $E = mC^2$ என்னும் சக்திச் சமன்பாடே இன்றைய விஞ்ஞான உலகின் புதிய திருப்பு முனையாக அமைந்தது. இந்தச் சமன்பாட்டில் E என்பது ஒன்றால் உருவாகும் சக்தியையும் m என்பது அந்தச் சக்தியை உருவாக்கும் பொருளின் திணிவையும் C என்பது ஒளியின் வேகத்தையும் குறிக்கிறது. அதாவது ஒன்றின் திணிவை ஒளியின் வேகத்தின் வர்க்கத்தினால் பெருக்கும் பொழுது அதிலிருந்து உருவாகக் கூடிய சக்தியின் அளவு பெறப்படுகிறது என்பதே அயன்ஸ்டினின் சக்திச்சமன்பாட்டின் எதிர்வு கூறலாக அமைகிறது. இந்தச் சக்திச் சமன்பாடு அயன்ஸ்டீனால் உருவாக்கப்பட்ட 1905 விஞ்ஞான உலகின் அற்புத ஆண்டு என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வர்ணிக்கப்படுகிறது. இதனால் தான் இந்தச் சக்திச்சமன்பாடு பிறப்பான 1905ம் ஆண்டின் நூற்றாண்டாகிய 2005 சர்வதேச உலகின் பௌதீக ஆண்டாக International Year of Physics என ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாண்டு ஜனவரி மாதம் 14ம் நாள் பாரிஸ் மாநகரிலே நடைபெற்ற பௌதீக விஞ்ஞானிகள் மகாநாட்டுடன் சர்வதேசப் பௌதீக ஆண்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்தச் சக்திச் சமன்பாட்டில் நம் தமிழ் அறிவியலின் அடிப்படையாக அமையும் எல்லாம் சக்திமயம் என்னும் தத்துவம் நிறுவப்பட்டது என்பது நம்மில் பலருக்குத் தெரியாத உண்மை. அதாவது சக்தியும் Energy திணிவும் Mass வேறுபட்ட பௌதீகநிலைகளைக் கொண்டிருந்தாலும் ஒன்று உருவமற்றதாகவும் மற்றையது உருவமுள்ளதாகவும் இருப்பினும் இரண்டும் ஒன்றே. உருவமற்ற பிரம்மமும் உருவமுள்ள படைப்புக்களும் ஒன்றே. எந்த ஒரு பொருளும் ஒளியின் வேகத்தைப் பெறமுடியாது. ஒளி ஒரு செக்கனுக்கு 30 கோடி மீட்டர் தூரம் அல்லது 186000 மைல் பயணிக்கும் வேகத்தைக் கொண்டது. எந்தப் பொருளுமே ஒளியின் வேகத்துடன் பயணிக்க முடியாது. அவ்விதம் பயணிப்பின் அது ஒளியாகவே மாறிவிடுமே தவிர அதனால் பௌதீகத்தன்மைகளைப் படைப்பின் இயல்புகளைக் கொண்டிருக்க முடியாது. அதேவேளை வான் கடந்த பெருவெளியில் அண்டத்தில் கறுப்புசக்தி எனக் கூறும் அளவுக்கு 80 வீதமான அளவுக்கு இருள் காணப்படுகிறது. இந்த கறுப்பு சக்தி தான் அனைத்துக்கும் ஆதாரமேடையாக தாங்கும் தளமாக அமைகிறது. கறுப்பும் ஒளியும் இணைந்ததாகத்தான் சக்தியின் தோற்றம் செயற்பாடு விளங்குகிறது. இதனால்தான் தமிழர் ஆன்மீகத்தில் படைப்பின் மூலதாரம் கறுப்புநிறத்ததாகவும் ஒளிவடிவானதாகவும் இருவேறு இயல்புகளில் குறிக்கப்பட்டு அவை இரண்டும் ஒன்றே அதுவே ஆதிபராசக்தி என்ற கோட்பாடாக விளக்கப்பட்டது. மேலும் வான்கடந்த வெளி நூறு பில்லியன் நட்சத்திரத் தொகுதிகளைக் கொண்டுள்ளதாகவும் ஒவ்வொரு நட்சத்திரத் தொகுதியும் 100 பில்லியன் நட்சத்திரங்களைக் கொண்டுள்ளதாகவும் விஞ்ஞானம் விளக்குகிறது. இதனை மெய்ஞானம் அன்னை பராசக்தியின் மேனியில் ஒளிரும் தாரகைக் கூட்டங்களாக வெளிப்படுத்துகிறது. சுடர்விடுபவளாக ஒளிர்தன்மையுள்ளவளாக அன்னை பராசக்தி ஆன்மீகத்தில் விளங்குகிறாள்.

இந்த நட்சத்திரங்களில் பெரும்பான்மையானவற்றுக்கு அவைகளுக்கான கிரகங்கள் உண்டு. இதனால் அந்தக் கிரகங்களிலும் உயிர்கள் வாழலாமென்பதை இன்றைய விஞ்ஞானம் மறுக்கவில்லை. அது இன்றைய விஞ்ஞானத்தின் ஒரு தேடலாகவும் கூடத் தொடர்கிறது. இந்தப் பின்னணியில் தான் தேவலோகம் நரகலோகம் போன்ற ஏழு உலகங்கள் குறித்த எண்ணங்கள் கீழைத்தேயச் சிந்தனைகளில் தோன்றின. ஏழு என்பதற்கு முன்னர் பல என்ற பொருள் இருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இவ்வாறாக நம் முன்னோர்கள் ஆன்மீகத்தில் வளர்த்த சிந்தனைகள் பல பின்னர் ஆரியர் வருகையால் ஆதிக்கசக்திகளின் எண்ணங்களுள் தோய்ந்து தேய்ந்து விஞ்ஞானத்தன்மையினை இழந்தது மட்டுமல்லாது விஞ்ஞானம் மெய்ஞானம் ஆகிய அனைத்துச் சிந்தனைக்கும் தளமாக தாயாக நின்ற தமிழ் பின்தள்ளப்பட்டு வடமொழி தேவமொழியாக்கப்பட்டது நாம் நாடிழந்து நல்வாழ்விழந்ததின் சமுகவெளிப்பாடாகியது. ஆயினும் இன்றையத் தமிழீழத் தமிழன் களத்தின் சக்தி தரு பலத்தில் புலத்தில் வாழ்ந்து தன்தாயகத்தின் தேசியத்தின் தன்னாட்சியின் மாட்சிகளை வெளிக்கொணரும் கடமையினை நடைமுறை வாழ்வில் கொண்டுள்ளான் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே அயன்ஸ்டீனின் சிந்தனைகள் எவ்வாறு நம்முன்னோர்கள் சிந்தனைகளுக்கும் விளக்கங்கங்களைத் தருகிறது என்ற பார்வையை முன்வைத்தேன்.

இனி அயன்ஸ்டீனின் வாழ்வின் காலக் கோட்டையும் சிறிது எடுத்து நோக்குவது நல்லதென எண்ணுகிறேன். அவ்வகையில் 1879 ம் ஆண்டு மார்ச் 14ல் ஜேர்மனியின் வூட்டம்பேர்ஸ்ஜில் உள்ள உல்ம் (Ulm, in Württemberg) என்னும் ஊரிலே அல்பிரெட் அயன்ஸ்டீன் பிறந்தார். ஆயினும் இவர் பிறந்த ஆறாம் வாரத்தில் இவருடைய குடும்பம் சுவிஸ்லாந்தில் உள்ள மூனிச்சுக்கு புலம்பெயர்ந்ததாகத் தெரிகிறது.

அயன்ஸ்டினுக்கு ஐந்து வயது நடக்கும் பொழுது அவனுடைய கையிலே கிடைத்த திசையறிகருவி விஞ்ஞானத்தின் திசையையே திருப்பும் புதிய சிந்தனையை அவனின் மனதில் தேடலாகத் தொடக்கி வைத்தது. இந்தக் காந்த ஊசி ஏன் வடகிழக்காக 45 பாகை சாய்ந்த நிலையில் துடிக்கிறது என்று அன்று தன் மனதில் எழுந்த தேடலே தன் கற்பனைகளின் அடித்தளமாக அமைந்தது என்பது அல்பிரெட் அயன்ஸ்டினின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகுழந்தைகள் தேடல்களைத் தொடங்கும் பொழுது பெற்றோர்கள் உற்றோர்கள் அதனை வரவேற்க வேண்டியதன் அவசியத்தை அயன்ஸ்டினின் வாழ்வின் உதாரணம் வலியுறுத்துகின்றது.

அயன்ஸ்டீன் தனது வீட்டில் வயலின் இசையையும் யூதமதத்தையும் பெற்றோர்வழிக் கல்வியாகக் கற்றதன் பின் ஆரம்பக் கல்வியை மூனிச்சில் உள்ள லூயிட்பொல்ட் ஜிம்னாசியத்தில் Luitpold Gymnasium பெற்றார். சிறுவயதில் மிகவும் தாமதமாகப் பேசும் குணம் கொண்டவராக காணப்பட்டார். இது நோயின் அறிகுறியா என்று கூட அவரின் பெற்றோர்கள் அங்கலாய்த்ததாகத் தெரிகிறது. எதற்கும் காரணம் தேட முயன்ற அவரின் கற்பனாத்திறனின் திணறல்தான் அந்த சிறுவயது திண்டாட்டம் என்பது பின்னர் கண்டறியப்பட்ட ஒன்றாக உள்ளது. வயலின் இசையும் யூதமதமும் வீட்டில் கற்பிக்கப்பட்ட நிலையில் ஆரம்பப்படிப்பை முனிச்சில் தொடங்கினார் அயன்ஸ்டீன். மேலும் கற்பனை கொண்டு காலத்தைக் கடக்க முனைந்த அயன்ஸ்டினின் அற்புத அறிவின் தூண்டுதலை அவரின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் புரிந்து கொள்ளவில்லை அல்லது தெரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர் பரீட்சைகளில் தோல்விகளையே தழுவினார். வகுப்பறையினைக் குழப்புபவர் என்று கூட விரட்டியடிக்கப்பட்டுள்ளார்.

பெற்றோர்கள் இத்தாலிக்கு மறுஇடப்பெயர்வு அடைந்தநிலையிலும் அயன்ஸ்டீன் தொடர்ந்தும் சுவிஸ்லாந்தில் உள்ள அறஉ (Aarau) என்னும் ஊரிலேயே தங்கினார். 1896ல் சூரிச்சில் (Zurich) உள்ள சுவிஸ் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் இணைந்து 1901ல் கணிதம் பௌதீகம் ஆகிய பாடங்களில் டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றார். சுவிஸ் நாட்டின் குடியுரிமையை பெற்றுக்கொண்ட இவர் ஆசிரியராக முயன்ற பொழுதிலும் அது கைகூடவில்லை. சுவிஸ் உரிமைகள் பதிவு அலுவலகத்தில் (Swiss Patent Office) தொழில் நுட்ப உதவியாளராகப் பதவியேற்றார்.

19வயதில் 1898அல்பிரெட் அயன்ஸ்டினின் கற்பனை மனதில் மிலிவா மாரிக்( Mileva Maric) என்னும் இளம்பெண் காதல் கற்பனைகளை வளர்த்தாள். 1903ல் மிலிவா மாரிக்கைத் திருமணம் செய்தார். காதல் கனவும் பாசக்கனவும் கலந்திருக்கும் காலத்தில் கற்பனைத்திறன் அதன் உச்சத்தை தொடும் என்பதற்கு ஏற்ப 1905ல் அல்பிரெட் அயன்ஸ்டீன் $E = mC^2$ சக்திச் சமன்பாட்டை எழுதினார். அதுவரை பல்கலைகழகங்களில் அயன்ஸ்டினுக்கு படிப்பதற்கு இடம் கொடுக்க மறுத்த விஞ்ஞான உலகம் கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தெழுந்தது. நியூட்டனின் கொள்கைகளே விஞ்ஞான உலகின் அடிப்படை என்றிருந்த நிலை அயன்ஸ்டீனின் புதிய சிந்தனைகளால் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டு விட்டமை உணரப்பட்டது. இவரது மகத்தான ஆய்வு வெளிவந்த 1905இலேயே இவருக்கு கலாநிதிப்பட்டமும் வழங்கப்பட்டது. ஒரு ஆய்வாளருக்கு அவருடைய கருத்தை முன்வைப்பதில் எத்தகைய தடைகள் முன்வந்தாலும் உறுதியுடன் அவற்றை எதிர்த்து தன் ஆய்வை வெளிக்கொணர்வதே அவரின் இலட்சியமாக அமைய வேண்டும் என்பதற்கு மற்றொரு உதாரணமாக அமைந்தவர் அயன்ஸ்டீன்.

1908ல் அசாதாரண விடயங்கள் தொடர்பான பேராசியராக (Professor Extraordinary) சூரிச்சில் விளங்கிய இவர் 1911ல் பிராக்குக்கு (Prague) சென்று அங்கு பௌதீகத் தத்துவங்களின் பேராசிரியராக (Professor of Theoretical Physics) கடமையாற்றினார். 1912ல் மீண்டும் சுவிஸுக்கு வந்து அங்கு பௌதீகத் தத்துவங்களின் பேராசிரியராகக் கடமையாற்றினார்.

தொடர்ந்து 1914ல் ஜேர்மன் பேர்லின் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் கைசீர் வில்கெம் பௌதீக நிலையத்தின் இயக்குனராகவும் (Director of the Kaiser Wilhelm Physical Institute and Professor in the University of Berlin) பதவியேற்ற அயன்ஸ்டீன் ஜேர்மனின் குடியுரிமையையும் பெற்றுக்கொண்டார். 1914ம் 1915ம் ஆண்டுக் காலப்பகுதியில் பேர்லின் பல்கலைக்கழகத்தில் சார்புத்தன்மை தொடர்பான பொதுக்கொள்கையை General Theory of Relativity அயன்ஸ்டீன் பூர்த்தி செய்தார்.

1919ல் இவரின் மனைவியை இவர் விவாகரத்து செய்தார். இவருடைய முதல் மனைவி மூலமாக இவருக்கு இரண்டு பெண்குழந்தைகளும் ஒரு ஆண்குழந்தையும் இருந்தனர். அதேயாண்டில் இவரின் உறவினரான எல்சா லூாவன்தலை (Elsa Löwenthal) திருமணம் செய்துகொண்டார். தொடர்ந்து 1920ல் சார்பியல் (Relativity) குறித்த விளக்கமான ஆய்வுகள் இவரால் வெளிக்கொணரப்பட்டது. இந்த சார்பியல் குறித்த ஆய்வு 1922ன் நோபெல் பரிசை அயன்ஸ்டீனுக்கு கிடைக்க வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அயன்ஸ்டினின் மற்றொரு விஞ்ஞான சாதனை அவரின் பிறவுணியன் இயக்கக் கொள்கைகள் குறித்த ஆய்வுகள் (Investigations on Theory of Brownian Movement) எனலாம். வெப்பசக்தி தொடர்பான கொள்கைகளின் பரிசோதனை முயற்சிகளாக இந்த ஆய்வுகளை அவர் 1926ல் முன்னெடுத்து அற்புதமான முடிவுகளை வெளிக்கொணர்ந்தார்.

1930ல் இவரின் விஞ்ஞானம் அல்லாத முதற் சிந்தனை சியோனிசம் (Zionism) என்ற தலைப்பில் யூதமதம் குறித்து வெளிவந்தது. இவர் ஜேர்மனின் யுத்தப் போக்கை கடுமையாக எதிர்த்தார். 1933ல் எதற்காக யுத்தம் (Why War?) என்ற இவரின் ஆக்கம் வெளிவந்தது. தொடர்ந்து அதேயாண்டில் ஜேர்மனை விட்டு வெளியேறி அமெரிக்காவின் குடிமகனாக மாறினார். 1934ல் எனது தத்துவங்கள் (My Philosophy) என்ற தனது நூலை வெளியிட்டார். 1936ல் இவரின் இரண்டாவது மனைவி எல்சா காலமானர்.

1938ல் பௌதீகத்தின் கூர்ப்பு (The Evolution of Physics) என்னும் இவரின் ஆய்வு வெளிவந்தது. 1939ல் அணுக்குண்டு தயாரிப்புக்குத் தனது அற்புதக் கண்டுபிடிப்புக்களின் உண்மைகள் பயன்படுத்தப்படுவதைக் கண்டித்து அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வோல்ட்டுக்குக் கடிதம் எழுதினார். 1950ல் எனது பிற்கால வாழ்விலிருந்து (Out of My Later Years) என்னும் நூலையும் இவர் வெளியிட்டார்.

1952ல் இஸ்ரேலின் இரண்டாவது ஜனாதிபதியாகப் பதவியேற்கும்படி இவருக்கு அழைப்புவிடுக்கப்பட்டது. ஆயினும் அதனை இவர் ஏற்கவில்லை. ஆனாலும் தனது விஞ்ஞான ஆய்வுகளின் உரிமைகளை எல்லாம் இஸ்ரேலின் ஹிப்புறு பல்கலைக்கழகத்திற்கே உரிமையாக்கியதன் மூலம் யூதர் என்னும் தனது தேசியத்தின் பற்றுதியைப் பாருக்குப் பறைசாற்றியவர் அயன்ஸ்டீன்.

1955ல் மாரடைப்பால் அயன்ஸ்டீனின் காலக்கோடு தொடர்வது நின்றுவிட்டது. அயன்ஸ்டின் மரணம் அடைவதற்குச் சற்று முன்னரும் அவர் தன்னுடைய கண்ணாடியையும் அவருடைய புதிய சமன்பாடுகள் மற்றும் அவருடைய எழுத்துக்கள் எவ்வளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பவை குறித்த குறிப்புக்களையும் கேட்டதாகக் கூறப்படுகிறது. இதன்மூலம் அவரின் மூச்சின் இறுதிவரை அவரில் தேடலுக்கான ஆர்வம் தொடர்ந்து கொண்டிருந்ததையும் தன்னுடைய பணிகள் முடிந்த முடிபல்ல வளர்ந்து செல்ல வேண்டிய ஆய்வுகள் என்ற தன்மையிருந்ததையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அயன்ஸ்டினின் அந்த தேடல் அந்த இயங்கியல் ஆர்வம் வீணாகவில்லை. இன்று வரை எத்தனையோ விஞ்ஞானிகள் அவரின் கொள்கைளை ஆதரித்தும் எதிர்த்தும் தொடரும் ஆய்வுகள் மனித வாழ்வின் மேம்பாட்டிற்கு மட்டுமல்ல கடவுளின் எண்ணங்கள் எவை என அறிவதே என் ஆர்வம் என்ற அயன்ஸ்டினின் தேடலின் தொடர்ச்சியாகவும் நீண்டு கொண்டே யிருக்கின்றன.

ஆம் அயன்ஸ்டீன் எனக்கு இந்த நிகழ்வு எப்படி நிகழ்கிறதென்பதிலோ அந்த நிகழ்வு எப்படி நிகழ்கிறது என்பதிலோ ஆர்வம் இல்லை. கடவுளின் எண்ணங்களை அறிந்து கொள்ள வேண்டும் மிகுதி எல்லாமே அதனுடைய விபரங்கள் தான் ("I am not interested in this phenomenon or that phenomenon," Einstein had said earlier in his life. "I want to know God's thoughts – the rest are mere details.") என்றார். எண்ணமே வடிவம் எண்ணுவது நானல்ல என்ற சைவசித்தாந்திகளின் முடிபும் அயன்ஸ்டினின் முடிபும் சங்கமிப்பதையும் கிழக்கும் மேற்கும் இணைவதையும் காண்கின்றோம்.

சுவாமி விவேகானந்தர் கீழைத்தேயச் சிந்தனைகள் ஆன்மா மேலைத்தேயச் சிந்தனைகள் உடல். இரண்டும் இணைகையிலேயே மனிதவாழ்வு உயிரும் உடலும் கொண்டதாக அமைகிறது என்று கூறியதன் நடைமுறைவாழ்வியல் உதாரணம் இன்றைய நூற்றாண்டின் மனிதனாகிய அல்பிரெட் அயன்ஸ்டின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச பௌதிக ஆண்டு 2005

இன்றைய நடைமுறை உலகில் பௌதிக ஆண்டு 2005 குறித்த சில தகவல்கள். முதலில் பௌதிகத்தால் நாம் தெரிந்து கொண்ட சில உண்மைகளை – நாம் பெற்றுக் கொண்ட பயன்பாடுகளை நாம் எடுத்து நோக்குவது பௌதிக அறிவின் அவசியத்தை நாம் புரிந்து கொள்ள உதவும்.

- பூமியின் நிறை ஒவ்வொரு ஆண்டும் பூமியை அடையும் 3000 தொன் வளிமண்டலக் கற்கள் துகள்களால் கூடுகின்றது. இதனை வெளிப்படுத்தியது பௌதிகம்
- பேர்சி பென்சர் என்பவர் ரேடார் பொறி (Radar Systems ) ஒன்றில் பரிசோதனை செய்து கொண்டிருக்கையில் சொக்லேட் துண்டு ஒன்று அலைகள் உருவாக்கிய வெப்பத்தினால் உருகியது. உடனே சில பொப்கோர்ன்களையும் அவர் அந்த அலைகளுக்கு நடுவே வைத்த பொழுது அவையும் பொங்கின. இதுவே நாம் பயன்படுத்தும் மைக்கிரோவேவ் ஒவன் (microwave oven) ஆரம்பமாகியது. இது பௌதிகத்தின் அற்புதமான கண்டுபிடிப்பு
- ஹியூபேர்ட் சிசில் பூத் (Hubert Cecil Booth) என்பவர்தான் நாம் பயன்படுத்தும் வக்கும் கிளினரை (vacuum cleaner) ஐ முதன் முதலில் கண்டுபிடித்தவர் என்பது பலருக்கும் தெரிந்த விடயம். ஆனால் இவர் தன்னுடைய உபகரணத்தை ஒரு சுழாயினால் சுத்தம் செய்ய முயன்ற பொழுது இவரின் சுவாசப்பைக்குள் தூசி சென்று அடைத்து இவர் choked ஆகி அதாவது மூச்சுத்திணறி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்பது பௌதிக விஞ்ஞானிகளின் வரலாறு தெரிந்தவர்களுக்குத் தான் தெரியும்.
- வானவெளியில் ஒரு மூலகம் Material வெடிக்கும் பொழுது செக்கனுக்கு 10000 கிலோமீட்டர்ஸ் வேகத்தில் சக்தி வெளிவீசப்படும். சுப்பர்நோவா supernova என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்தச் செயற்பாட்டின் பொழுது வான்வெளியில் உள்ள இலட்சம் கோடி 100,000,000,000 நட்சத்திரங்கள் ஆறுமாதங்களுக்கு வெளியிடும் சக்தியளவு சக்தி பெறப்படுவதாக பௌதிகம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீனஸ் எனப்படும் புதன் கிரகத்தின் ஒருநாள் அதன் ஒரு ஆண்டை விட நீண்டதாக உள்ளது. என்ன அதிசயமாக இருக்கிறதா? ஆம். புதன் சூரியனைச் சுற்ற 225 புவிநாட்கள் தேவை. ஆனால் அது தன்னைத் தானே சுற்ற 243 புவிநாட்கள் தேவை. அப்படியானால் புதனில் நாள் ஆண்டை விட நீண்டகாலத்தைக் கொண்டுள்ளது
- IBM's ASCI white supercomputer தான் உலகின் மிகவும் வேகமான கணினி. 17 யானைகளின் நிறை உடையது. ஒரு சாதாரண கல்குலெட்டர் 10 மில்லியன் ஆண்டுகளுக்குச் செய்கின்ற கணிப்பை ஒரு செக்கனில் செய்யும் ஆற்றல் உடையது இந்த விசேட கணினி.
- ஒரு மின்னற் கீற்று 160000 பாண்துண்டுகளை வாட்டும் சக்தியை தரும். ஆனால் மின்னல் கீற்று 1ன் கீழ் 10000 செக்கன்களுக்கு மட்டும் ஒளிர்வதால் பாண் துண்டைப் புரட்டுவதற்குள் அது மறைந்து விடும்.
- ஒரு 10 கிலோ கிராம் மூலகம் தானாகவே சக்தியாக மாறினால் 100 வட் சக்தியுள்ள மின் குமிழை 300 மில்லியன் ஆண்டுகளுக்கு எரிக்கக் கூடிய சக்தியைத் தரும்
- நாம் ஓரிடத்தில் நின்று வானவில்லைப் பார்த்தாலும் பார்க்கின்ற ஒவ்வொருவருக்குமே வானவில் வித்தியாசமாகவே தெரியும் என்கிறது பௌதிகம். இதற்குக்காரணம் ஒளி ஒவ்வொருவரது கண்களையும் வெவ்வேறு கோணத்திலேயே வந்தடையும் என்பதேயாகும்.
- சந்திரன் பூமியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 3புள்ளி 2மீற்றர் தூரத்தால் விலகிச் செல்கிறது. தங்க இலை பற்றிக் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? 0.00008 மில்லி மீற்றர் தடிப்பு மட்டும் உள்ள இந்த தங்க இலை 300 அணுக்களின் தடிப்பைக் கொண்டது. இதனால் அதிக பரப்பளவில் உள்ள பிரதேசத்தைக் குறைந்த செலவில் மூடுவதற்கு இந்த தங்க இலையைப் பயன்படுத்துகிறார்கள்.

## கமோமைல் (**camomile**)தேநீர் குடித்தால் அது தடுமல் வருவதைத் தடுக்கிறதா?

கமோமைல் (camomile) தேநீர் குடித்தால் அது தடுமல் வராமல் தடுக்கிறதென ஆய்வொன்று தெரிவிக்கிறது. இலண்டன் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த ஆய்வாளர்கள் வைத்தியக் கலாநிதி எலைன் ஹோம்ஸ் (Dr Elaine Holmes) தலைமையில் ஒரு நாளைக்கு 5 கோப்பை கமோமைல் (camomile) தேநீர் குடிப்பவர்கள் 14 பேரைப் பரிசோதித்த பொழுது இந்த உண்மையை அதாவது அவர்கள் உடல் தடுமலை எதிர்க்கும் வலிமையுடையதாக இருந்ததை தாங்கள் கண்டதாக விவசாய உணவியல் இரசாயனச் சஞ்சிகையில் (Journal of Agricultural and Food Chemistry) ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளனர்.

ஜேர்மன் கமோமைல் (flowers of German camomile) என்னும் பூக்களில் இருந்து இந்த தேநீர் தயாரிக்கப்படுகிறது. மன்சநிலா (Mnzanilla) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்தப் பூவின் தாவரவியல் பெயர் மட்ரிக்காரிகா ரிக்குட்டிட்டா (Matricaria recutita). இந்தப் பூவில் இருந்து தயாரிக்கப்பட்ட தேநீரில் 5 கோப்பைகளை ஒரு நாளுக்கு குடித்தவர்களின் சிறுநீரைப் பரிசோதித்த பொழுது இந்தத் தேநீர் கிளைசின் (glycine) மட்டத்தைக் கூட்டி தசைகளில் ஏற்படக்கூடிய பிடிப்புக்களைத் தளர்த்துகிறதெனவும் சிறு நீரைச் சுத்தி செய்து அதிலுள்ள வீக்கங்களை ஏற்படுத்தக் கூடிய எதிரியல்புகளை நீக்குகிறதெனவும் (anti-inflammatory hippurate) கண்டறியப்பட்டு உள்வது. இதனால் தடுமல் மற்றும் மாதப்போக்குக் கால வேதனைகள் ஆகியவற்றுக்கு இது நிவாரணம் வழங்குகிறதெனவும் கூறப்பட்டு உள்ளது.

ஆயினும் பொதுவான தடுமல்கள் குறித்து ஆய்வு செய்யும் கார்டிவ் பல்கலைக்கழக பேராசிரியர் ரொன் எக்கலஸ் (Professor Ron Eccles, from the Common Cold Centre in Cardiff) இது ஒரு உற்சாகமான கண்டுபிடிப்பு எனவும் ஆயினும் இந்தக் கண்டுபிடிப்புக்கள் குறித்து நீண்ட காலத்திற்குச் சிகிச்சைப் பிரிவுகள் அவதானித்ததின் பின்னரே இது குறித்து தங்களின் உறுதியான ஏற்புடைமையை தெரிவிக்கலாமெனவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மகாகவி சேக்ஸ்பியர் சில தகவல்கள்



## பிறந்த திகதி

சேக்ஸ்பியர் பிறந்த திகதி எதுவென்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு மட்டுமல்ல யாருக்குமே தெரியாது. 1564 ஏப்ரல் 23 என்று மரபுரீதியாகக் கருதப்படுகிறது. ஆனால் 26 ஏப்ரல் 1564ல் சென் ஜோர்ஜ் இன் தினத்தில் இவருக்கு அவர் பிறந்த ஊரான ஸ்ரட்போர்ட் (Stratford) இலுள்ள ஆலயத்தில் திருமுழுக்களிக்கப்பட்டது என்ற பதிவைக் கொண்டு அக்கால வழமைப்படி 3ம் நாளில் குழந்தைக்குத் திருமுழுக்கு அளித்தல் என்னும் வழமையின் அடிப்படையில் ஏப்ரல் 23 1564 உலக மகாகவியின் பிறந்தநாளாகக் கொண்டாடப்படுகிறது.

## இறந்த திகதி

அதே வேளை சேக்ஸ்பியர் 1616 ஏப்ரல் 23ல் இறந்தார். அந்த வகையில் உலக மகாகவியின் பிறந்த நாளும் இறந்த நாளும் ஒரே திகதியில் ஒரே மாதத்தில் இடம்பெற்று அன்றைய தினத்தை ஏப்ரல் 23 ஐ பிரித்தானியாவின் தேசிய கவிஞர் தினமாக கொண்டாடும் மரபைத் தோற்றுவித்துள்ளது. அவருடைய பிறந்த ஊரான ஸ்ரட்போர்ட்டிலே (Stratford) உள்ள தூய திரித்துவ ஆலயத்தில் (Holy Trinity Church) அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த கற்களைப் பகிர்ந்து கொண்டவன் ஆசீர்வதிக்கப் படட்டும் என்னுடைய எலும்புகளை அகற்ற முயல்பவன் சபிக்கப்படட்டும் ("Blessed be the man that spares these stones, And curst be he that moves my bones.") என்பது சேக்ஸ்பியர் தன்னுடைய கல்லறை குறித்து தானே எழுதிய வாசகங்களாகும்.

## குடும்பம்

வில்லியம் சேக்ஸ்பியரின் தந்தை ஜோன் சேக்ஸ்பியர் (John Shakespeare) ஒரு விவசாயி. தாயார் மேரி ஆடன் (Mary Arden) செல்வச் செழிப்பான விவசாயியான ஆடனின் மகள். ஏழு சகோதரர்களில் மூவர் இறந்துவிட்டனர். அதிலும் சேக்ஸ்பியர் பிறந்த வருடத்திலேயே ஸ்ரட்போர்ட்டில் பரவிய கொள்ளை நோயால் இருவர் இறந்தனர். சேக்ஸ்பியர் 1582 நவம்பர் மாதத்தில் தனது 18வது வயதில் தனக்கு எட்டு வயது மூத்தவரான ஆன் ஹத்தவேயை (Anne Hathaway) ஸ்ரட்போர்ட்டிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ள டெம்பிள் கிரவ்டனில் (Temple Grafton) திருமணம் செய்தார். திருமணத்தின் பொழுது ஆன் ஹத்தவே மூன்றுமாத மகப்பேற்று நிலையில் இருந்தார் திருமணமாகி 6வது மாதத்தில் சூசானா (Susanna) சேக்ஸ்பியரின் மூத்த பெண் குழந்தை பிறந்தார். ஹம்நட் யூடித் (Hamnet and Judith) என்னும் இரட்டைக் குழந்தைகள் 2 பெப்ருவரி 1585ல் பிறந்தனர். ஆண்குழந்தையாகிய ஹம்நட் பதினொரு வயதில் இறந்தான். இதனால் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பிள்ளைகளுமே சேக்ஸ்பியரின் வாரிசுகளாகத் தொடர்ந்தனர். சேக்ஸ்பியர் தனது சொத்துக்களை தன் செல்லப் பெண்ணாகிய சூசானா (Susanna) வின் பெயரிலேயே விட்டுச் சென்றார். தனது கவிதா நெஞ்சத்தைப் புரிந்து கொள்ளாத மனைவிக்கு சேக்ஸ்பியர் சொத்துக்கள் எதையுமே கொடுக்கவில்லை. அத்துடன் தனது மனைவியின் தொல்லையையே அடங்காப்பிடாரி (The Taming of the Shrew) என்னும் நாடகமாக எழுதினார் எனவும் அவருடைய நாடகக் குழுவில் அவருக்கு ஒரு காதலி அவளின் திருமணம் செய்யாத மனைவியாக இருந்தாரெனவும் கூறப்படுகிறது.

## கலைத்துவம் கவித்துவம்

ஸ்ரட்போர்ட் கிங்ஸ் புதிய பாடசாலையில் மட்டும் படித்து பல்கலைகழகம் செல்லாத சேக்ஸ்பியர் 37 நாடகங்களினதும் 154 கவிதைகளினதும் படைப்பாளியாகவுள்ளார். முதலாவது நாடகம் (sonnets) என ஆய்வாளர்கள் கருதும், ஆறாவது ஹென்றி (Henry VI) 1589க்கும் 1590க்கும் இடையில் சேக்ஸ்பியருக்கு 24 – 25 வயது நடக்கும் பொழுது எழுதப்பட்டது என்பர். சேக்ஸ்பியருக்கு 11 வயது நடக்கையில் மகாராணி முதலாவது எலிசபேத் கெனில்வேர்த் கோட்டைக்கு ( Kenilworth Castle) வருகை தந்த பொழுது அவராலும் அங்கு நடாத்தப்பெற்ற நாடகத்தாலும் கவரப்பட்டதன் விளைவாகவே அவர் நாடகத்துறையில் ஈடுபாடு காட்டினார் என்னும் மரபு உண்டு. இதனை உறுதி செய்யக்கூடிய வகையில் இவரின் பல நாடகங்களில் அரச விசுவாசம் உயர்வாகப் பேசப்படுகிறது. இவரின் முதற் கவிதை (sonnet) வீனஸ் அன்ட் அடோனிஸ் (Venus and Adonis) 1593ல் சேக்ஸ்பியருக்கு 29 வயதில் இயற்றப்பட்டது என்பர். சேக்ஸ்பியர் தன்னுடைய இறுதி நாடகமாகிய இரண்டு உயர்வான உறவினர்கள் ( The Two Noble Kinsmen) நாடகத்தை தனது 49 வது வயதில் 1613ல் எழுதினார். சேக்ஸ்பியர் தன்னுடைய நாடகங்களை பதிப்பிக்கவில்லை. அவருடன் நாடகத்தில் பங்கேற்ற நடிகர்களான ஜோன் ஹெம்மின்ஜஸ் ஹென்றி ஹொன்டெல் (John Hemminges and Henry Condell) ஆகியோரே 1623ல் இவரின் 37 நாடகங்களை பதிப்பில் வெளியிட்டனர்.

## சொல்லாக்கம் மரபுச்சொல்லாக்கம் புதுவடிவு பெற்றது

சேக்ஸ்பியர் ஆங்கிலத்தில் 1700 புதிய சொற்களை உருவாக்கினவராகக் கருதப்படுகிறார். aerial, critic, submerge, majestic, hurry, lonely, road, assassination, laughable, reliance, exposure போன்றன அவர் உருவாக்கிய புதிய சொல்லாக்கத்திற்குச் சில உதாரணங்கள். அவ்வாறே அவர் பல மரபுச் சொற்களையும் (phrases) உருவாக்கியுள்ளார். 'Break the ice', 'All that glitters is not gold', 'Hot-blooded', 'In the mind's eye', 'Housekeeping', 'It's all Greek to me', 'The naked truth', 'One fell swoop', 'Method in his madness' என்பன சேக்ஸ்பியரால் உருவாக்கப்பட்ட மரபுச் சொற்களுக்குச் சில உதாரணங்கள்.

## சேக்ஸ்பியர் வாழ்ந்த காலம் துன்பமானது

சேக்ஸ்பியர் வாழ்ந்த காலத்தில் தொற்றுநோய்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாகிக் கொண்டிருந்தனர். 1603ம் ஆண்டில் மட்டும் இலண்டனில் 33000 மக்கள் இறந்தனர். சேக்ஸ்பியர் திருமணமாகிய பின்னர் இலண்டன் வந்து நாடக அரங்கங்களில் வேலை தேடியதாகத் தெரிகிறது. 1593ல் பரவிய கொள்ளை நோயால் ஏற்பட்ட மரணங்கள் நாடகக் கொட்டகைகளை செயற்படாது செய்தன. இதனால் இதற்கு அடுத்த ஆண்டில் சேக்ஸ்பியர் கவிதையில் அதிக அக்கறை காட்டியதாகத் தெரிகிறது. 1596ல் சேக்ஸ்பியரின் மகனும் பலியானதை அடுத்து சேக்ஸ்பியர் ஆவிகள் மந்திரதந்திரங்கள் தொடர்பான பாத்திரங்களையும் உருவாக்கியமையைக் காணலாம். Macbeth, King Lear, Othello and Anthony and Cleopatra ஆகியன 1593க்குப் பின்னரான ஆவிகள் பற்றிப் பேசப்படும் நாடகங்கள். அக்காலத்தில் பிறப்பை விட இறப்பு அதிகமான இடமாக இலண்டன் இருந்தது. தற்காலிக நாடக கொட்டகைகளே இருந்தன அவை கூட விலைமாதர்கள் குடிபோதைகள் விற்பனைச் சந்தையாகவே திகழ்ந்தன. 1576ல் தான் தேம்ஸ்நதி தீரத்தில் முதலாவது தியட்டர் அமைக்கப்பட்டு 1599ல் இது குளோப் தியட்டர் (The Globe Theatre) என்னும் அரங்கமாகியது. இங்குதான் சேக்ஸ்பியர் நாடகங்கள் அரங்கேறத்தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகதை

# புரியாத தனிமை

றங்ஹா பாலசுப்பிரமணியம் - மருத்துவ மாணவி
சென்ட் ஜோர்ஜஸ் மருத்துவக்கல்லூரி இலண்டன் பல்கலைக்கழகம்



அதோ அந்த மூலையில் மற்றைய சிறுவர்களோடு விளையாடாமல் ஒதுங்கியிருக்கும் சிறுவன்தான் சிவா என்று எல்லோராலும் அழைக்கப்படும் சிவனுஜன். இளம் தம்பதிகளான பார்த்திபன்–சியாமளா தம்பதிகளின் ஒரே புதல்வன். இப்பொழுது சிறிது காலமாகவே, அவர்களைக் கவலையில் ஆழ்த்தியிருந்தான், ஐந்தே வயதான சிவா.

அவர்களுடைய கவலைக்குக் காரணம் , சிவா, அவனுடைய வயதையொத்த சிறுவர்களைப் போல அல்லாது சிறிது வித்தியாசமாக இருக்கிறான் என்பதுதான். அவனுடைய தாயான சியாமளாவுடன் மட்டும்தான் , சிவா ஒட்டிப் பழகுவான். அவள்தான் அவனுக்கு எல்லாமே செய்ய வேண்டும். தந்தை பார்த்திபன் , அவனோடு பேச முயன்றால் வீரிட்டு அழுவான் , அல்லது, கேட்காதது போல எங்கோ பார்த்துக் கொண்டிருப்பான். அவனுடைய தாயாரைத் தவிர வேறு ஒருவரும் அவனைத் தொட்டுப் பேச முடியாது. ஒருமுறை பார்த்திபன் அவனைத் தூக்க முயன்றபோது சண்டை செய்த சிவா, பழைய நிலைமைக்குத் திரும்ப கிட்டத்தட்ட மூன்று நாட்கள் எடுத்தது.

அவன் வாய் திறந்து கதைப்பதும் குறைவு. அப்படிக் கதைத்தாலும் அவனுடைய வார்த்தைப் பிரயோகம் குறைவாகவே இருக்கும். சிலவேளைகளில், சில சொற்களைத் திருப்பித் திருப்பிக் கூறுவதுபோல் தோன்றும்.

இன்னும் சில சாப்பாட்டு வகைகளை மட்டுமே சிவா உண்பான். அவனுக்கு உருளைக்கிழங்கு சிப்ஸ்சும் , கெச்சப்பும் (Ketchup) மிகவும் பிடிக்கும். மிகவும் பிடிக்கும் என்ற காரணத்தால், தான் விரும்பியபடி விரும்பிய அளவு சாப்பிட மாட்டான். எண்ணி 25 சிப்ஸ் துண்டுகள் மட்டும் தான். சிப்ஸ்சும் சிவப்பு நிறத்தினாலான தக்காளி கெச்சப்பும் , மதியம் சரியாக ஒரு மணிக்கு அவர்களுடைய சமையலறையில் சாப்பாட்டு மேசையில் இருக்க வேண்டும். இரவு பத்து மணிக்கு, அவனுக்குப் பிடித்த அந்த சிவப்பு நிற உடையை அணிந்து கொண்டு வீடியோவில் ரொம் அண்ட் ஜெறி ( Tom & Jerry) பார்த்தால் மட்டுமே அவன் நித்திரைக்குச் செல்வான்.

சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் , அவன் சிறு வயதில் கூட, கிட்டத்தட்ட இரண்டு மூன்று வயதில் கூட, வித்தியாசமாகவே இருந்தது போல, இப்போது பார்த்திபன் சியாமளா தம்பதியருக்குத் தோன்றியது. முன்பு கூட, சிவா, மற்றைய அவன் வயதையொட்டிய பிள்ளைகளைப் போல் விளையாடுவதில்லை. விளையாட்டுப் பொருட்களை வித்தியாசமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கில் அடுக்கி, அவற்றை வெவ்வேறு கோணங்களில் பார்த்துக் கொண்டிருப்பான். அவனுடைய பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும் நிமிர்ந்து பார்ப்பதில்லை. அப்போது அவனுக்குக் காது கேட்காமல் இருக்குமோ என்று கூடப் பயந்தார்கள். ஆனால் அவனுக்குக் காது நன்றாகக் கேட்கின்றது என்று அறிந்த பின், வீட்டில் வேறு சிறு குழந்தைகள் இல்லைத் தானே, சிவா மற்றைய சிறுவர்களோடு சேர்ந்து பழகும்போது நன்றாகி விடுவான் என்று தங்களுக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டார்கள். ஆனால் அப்போது கவனயீனமாகவிட்டது தவறோ என்று இப்போது எண்ணத் தோன்றியது.

நேரம் காலை *09:30*. கடந்த இருபது நிமிடங்களாக, தமது குடும்ப வைத்தியரைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறார்கள் பார்த்திபனும் சியாமளாவும். அருகில் சிவா, தான் அணிந்திருக்கும் சிவப்பு நிறத்திலான உடையை முறைத்துப் பார்த்த வண்ணமிருக்கின்றான்.

சிவாவுடைய ஆசிரியைதான் சியாமளாவிடம் கூறியிருந்தார் ; " சிவாவினுடைய நடவடிக்கைகள் வித்தியாசமானவையாக இருப்பதற்கு மருத்துவரீதியான காரணங்கள் ஏதாவது இருக்கலாம். அதனால் உங்களுடைய குடும்பவைத்தியரிடம் அறிவுரை பெறுங்கள் என்று". அதன் பொருட்டே பார்த்திபனும் சியாமளாவும் வைத்தியரைப் பார்ப்பதற்காக சிவாவை அழைத்து வந்திருந்தார்கள்.

சிவாவினுடைய பெயர் அழைக்கப்பட்டதும் வைத்தியருடைய ஆலோசனை அறைக்குள் நுழைந்தவர்கள் தங்களுடைய மனக்கவலையைத் தயங்கித் தயங்கி கூறினார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை மிக உன்னிப்பாகக் கேட்ட வைத்தியர் , சிவாவைத் தான் பரிசோதிக்க விரும்புவதாகக் கூறி, சிவாவிற்கு ஒரு கதை கூறுகின்றார். அந்தக் கதை இதுதான்.

" சலி ( Sally), ஆன் (Anne) என்று இரண்டு சிறு பெண்கள் , ஒரு பந்தை வைத்து விளையாடுகின்றார்கள். சலி ஏதோ ஒரு காரணத்திற்காக வெளியே செல்ல நேரிடும்போது, பந்தை மேசைக்குக் கீழ் மறைத்து வைத்துவிட்டுச் செல்கின்றார். சலி வெளியே சென்றவுடன் , ஆன் அந்தப் பந்தை எடுத்து அலுமாரி ஒன்றுக்குள் மறைத்து விடுகின்றாள்.",

இவ்வாறு கூறிய வைத்தியர் , சிவாவிடம் கேட்கிறார் , " சிவா, இப்போது பந்து எங்கே உள்ளது?". சிவாவும் பந்து அலுமாரிக்குள் உள்ளது என்று சரியாகக் கூறிவிடுகின்றான். வைத்தியர் கேட்கிறார் "சிவா, பந்து இப்போது எங்கே உள்ளது என்று சலி நினைப்பாள்?". சிவா அதற்கும் அலுமாரிக்குள்ளே உள்ளது" என்று கூறிவிடுகின்றான். அதனைக்கேட்ட வைத்தியர், சற்று நேரம் யோசித்து விட்டு, பார்த்திபன் – சியாமளாவிடம் விளக்குகின்றார்.

"நீங்கள் இப்போது மனதைத் திடப்படுத்திக்கொண்டு நான் கூறுவதைக் கவனமாகக் கேட்க வேண்டும். நீங்கள் கூறியவற்றை வைத்துக் கொண்டும் நான் செய்த சோதனையின் அடிப்படையிலும் உங்களுடைய மகன் Autism என்கிற நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றேன். சாதாரண உள வளர்ச்சியுள்ள 4–4½ வயதுடைய ஒரு சிறுவன், பந்து இப்போது எங்கே உள்ளது என்று சலி நினைப்பாள் என்ற கேள்விக்கு, மேசைக்கு கீழ் என்று கூறியிருப்பான். ஆனால் உங்களுடைய மகனால் அவ்வாறு சிந்திக்க முடியவில்லை. Autistic சிறுவர்களால் அவ்வாறு சிந்திக்க முடிவதில்லை. அவர்களைச் சூழ உள்ள இடங்களோ, பொருட்களோ அவர்களை உற்சாகப்படுத்துவதில்லை. ஒருவர் , ஏன் சிலவேளைகளில் சந்தோஷமாக இருக்கின்றார். கவலையாக இருக்கின்றார் என்றெல்லாம் இப்படியான சிறுவர்களால் உணரமுடியாது. மற்றவர்களுடைய வித்தியாசமான உணர்ச்சிகளுக்கான காரணங்களை இந்தச் சிறுவர்களால் உணரமுடியாது. இதனை 'lacking a theory of mind', என்று ஆங்கிலத்தில் கூறுவோம்", என்று கூறிய வைத்தியர், தன்னுடைய நோய் நிர்ணயத்தை உறுதி செய்வதற்காக சிவாவை வேறு ஒரு மருத்துவ ஆலோசகரிடம் அனுப்பி வைக்கின்றார்.

பார்த்திபன் – சியாமளா தம்பதியினரும் நெஞ்சில் பாரத்துடனும் எதிர்காலம் குறித்த பல கேள்விகளுடனும் குடும்பவைத்தியர் குறிப்பிட்ட மருத்துவ ஆலோசகரை நாடிச் செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழில் எண்களை எழுதுவது குறித்த தொல்காப்பியர் வழி

நீற்றா பற்றிமாகரன் BA (Tamil) BSc (Education) PGDip (Social Policy) PGDip (Housing)

தமிழில் எண்களை எழுதுவது எப்படி என்பது குறித்த தொல்காப்பியரின் விளக்கத்தை தொகுத்து தருவதே இந்தக் கட்டுரையின் நோக்கு.

## எண்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | பதினொன்று | ஒருபஃது | ஒருநூறு | ஓராயிரம் / ஒராயிரம் |
| இரண்டு | பன்னிரண்டு | இருபஃது | இருநூறு | இராயிரம் / ஈராயிரம் |
| மூன்று | பதின்மூன்று | முப்பஃது | முந்நூறு | முவ்வாயிரம் |
| நான்கு | பதினான்கு | நாற்பஃது | நானூறு | நாலாயிரம் |
| ஐந்து | பதினைந்து | ஐம்பஃது | ஐந்நூறு | ஐயாயிரம் |
| ஆறு | பதினாறு | அறுபஃது | அறுநூறு | ஆறாயிரம் |
| ஏழு | பதினேழு | எழுபஃது | எழுநூறு | ஏழாயிரம் |
| எட்டு | பதினெட்டு | எண்பஃது | எண்ணூறு | எண்ணாயிரம் |
| ஒன்பது | | தொண்ணூறு | தொள்ளாயிரம் | ஒன்பதினாயிரம் |
| பத்து | | | | |

## பத்தின் முன் ஒன்று முதல் எட்டு வரின்

- பத்தின் முன் ஒன்று முதல் எட்டு வரின் குற்றியலுகரமாகிய து மெய்யோடு கெடும்.
- இரண்டு என்னும் எண்ணுப் பெயரைத் தவிர்த்து மற்ற எண்ணுப் பெயர்கள் இன் சாரியை பெற்று வரும்.

பத்து + ஒன்று
பத் + ஒன்று
பத் + இன் + ஒன்று
பதினொன்று

- பன்னிரண்டு இன் சாரியை பெற்று வராது.
- பத்து என்பதன் த கரவொற்றுக் கெட ன கரவொற்று இரட்டிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து + இரண்டு
பத் + இரண்டு
பன்ன் + இரண்டு
பன்னிரண்டு

பத்து + மூன்று
பத் + மூன்று
பத் + இன் + மூன்று
பதின்மூன்று

பத்து + நான்கு
பத் + நான்கு
பத் + இன் + நான்கு
பதினான்கு

பத்து + ஐந்து
பத் + ஐந்து
பத் + இன் + ஐந்து
பதினைந்து

பத்து + ஆறு
பத் + ஆறு
பத் + இன் + ஆறு
பதினாறு

பத்து + ஏழு
பத் + ஏழு
பத் + இன் + ஏழு
பதினேழு

பத்து + எட்டு
பத் + எட்டு
பத் + இன் + எட்டு
பதினெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஒன்று முதல் ஒன்பதின் முன் பத்து வரின்

- ஒன்று முதல் ஒன்பதின் முன் பத்து வரின் பத்து என்பதில் த கரவொற்றுக் கெட அவ்விடத்தில் ஆய்தம் வரும்.

- ஒன்று முதல் ஒன்பதிலுள்ள குற்றியலுகரம் மெய்யோடு கெடும்.

- ஒன்றின் ஒற்றாகிய ன கரம் ர கரவொற்றாய்த் திரிய அவ்விடத்தில் உ கரம் வரும்.

ஒன்று + பத்து
ஒன்று + பது
ஒன்று + ப∴து
ஒன் + ப∴து
ஒர் + ப∴து
ஒர் + உ + ப∴து
ஒருப∴து

- இரண்டின் ஒற்றாகிய ண கரம் ர கரவொற்றாய்த் திரிய அவ்விடத்தில் உ கரம் வரும்.
- இரண்டு என்னும் எண்ணிற்கு இடைநின்ற ர கரம் அம்மொழி பொருள் பெறும் போது மறைந்து விடும்.

இரண்டு + பத்து
இரண்டு + பது
இரண்டு + ப∴து
இரண் + ப∴து
இர் + ப∴து
இர் + உ + ப∴து
இருப∴து

- மூன்று இதன் நெடுமுதல் குறுகும்.
- மூன்றின் ன கரவொற்றுப் ப கரவொற்றாய் முடியும்.

மூன்று + பத்து
மூன்று + பது
மூன்று + ப∴து
மூன் + ப∴து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் + ப∴து
முப் + ப∴து
முப்ப∴து

- நான்கின் ன கரவொற்று ற கரவொற்றாய் முடியும்.

நான்கு + பத்து
நான்கு + பது
நான்கு + ப∴து
நான் + ப∴து
நாற் + ப∴து
நாற்ப∴து

- ஐந்தின் ந கரவொற்று ம கரவொற்றாய் முடியும்.

ஐந்து + பத்து
ஐந்து + பது
ஐந்து + ப∴து
ஐந் + ப∴து
ஐம் + ப∴து
ஐம்ப∴து

- ஆறு இதன் நெடுமுதல் குறுகும்.

ஆறு + பத்து
ஆறு + பது
ஆறு + ப∴து
அறு + ப∴து
அறுப∴து

- ஏழு இதன் நெடுமுதல் குறுகும்.

ஏழு + பத்து
ஏழு + பது
ஏழு + ப∴து
எழு + ப∴து
எழுப∴து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- எட்டின் ட கரவொற்று ண கரவொற்றாய் முடியும்.

எட்டு + பத்து
எட்டு + பது
எட்டு + ப∴து
எட் + ப∴து
எண் + ப∴து
எண்ப∴து

- ஒன்பது என்னும் சொல் ஒன் என்னும் சொல்லாக நிற்கும்.
- ஒன் என்பதில் ஒ கரத்துக்கு முன் த கரவொற்றுத் தோன்றும்.
- ஒன் என்பதில் நின்ற ன கரவொற்று இரண்டு ண கரவொற்றாக மாறும்.
- ப∴து என்பதன் ப கரமும் ஆய்தமும் கெட ஊ காரம் வந்து தோன்றும்.
- ப∴து என்பதில் து வில் உள்ள (த் + உ) த கரவொற்று ற கரவொற்றாய்த் திரியும்.

ஒன்பது + பத்து
ஒன் + பத்து
ஒன் + பது
ஒன் + ப∴து
த் + ஒன் + ப∴து
தொன் + ப∴து
தொண்ண் + ப∴து
தொண்ண் + து
தொண்ண் + ஊது
தொண்ண் + ஊறு
தொண்ணூறு

## ஒன்று முதல் ஒன்பதின் முன் நூறு வரின்

- ஒன்று முதல் ஒன்பதின் முன் நூறு வரின் ஒன்று முதல் ஒன்பதிலுள்ள குற்றியலுகரம் மெய்யோடு கெடும்.

- ஒன்றின் ஒற்றாகிய ன கரம் ர கரவொற்றாய்த் திரிய அவ்விடத்தில் உ கரம் வரும்.

ஒன்று + நூறு
ஒன் + நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் + நூறு
ஓர் + உ+ நூறு
ஒருநூறு

- இரண்டின் ஒற்றாகிய ண கரம் ர கரவொற்றாய்த் திரிய அவ்விடத்தில் உ கரம் வரும்.
- இரண்டு என்னும் எண்ணிற்கு இடைநின்ற ர கரம் அம்மொழி பொருள் பெறும் போது மறைந்து விடும்.

இரண்டு + நூறு
இரண் + நூறு
இர் + நூறு
இர் + உ+ நூறு
இருநூறு

- மூன்று இதன் நெடுமுதல் குறுகும்.
- மூன்றின் ன கரவொற்று ந கரவொற்றாய் முடியும்.

மூன்று + நூறு
மூன் + நூறு
முன் + நூறு
முந் + நூறு
முந்நூறு

- நான்கின் ன கரவொற்று திரியாமல் வரும்.

நான்கு + நூறு
நான் + நூறு
நானூறு

- ஐந்தின் ந கரவொற்று திரியாமல் வரும்.

ஐந்து + நூறு
ஐந் + நூறு
ஐந்நூறு

- ஆறு இதன் நெடுமுதல் குறுகும்.

ஆறு + நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறு + நூறு
அறுநூறு

- ஏழு இதன் நெடுமுதல் குறுகும்.

ஏழு + நூறு
எழு + நூறு
எழுநூறு

- எட்டின் ட கரவொற்று ண கரவொற்றாய் முடியும்.

எட்டு + நூறு
எட் + நூறு
எண் + நூறு
எண்ணூறு

- ஒன்பது என்னும் சொல் ஒன் என்னும் சொல்லாக நிற்கும்.
- ஒன் என்பதில் ஒ கரத்துக்கு முன் த கரவொற்றுத் தோன்றும்.
- ஒன் என்பதில் நின்ற ன கரவொற்று இரண்டு ள கரவொற்றாக மாறும்.
- நூறு என்பதன் ந கரம் கெட ஊ காரம் ஆ காரமாக மாறும் இவ்விடத்தில் ஆ காரத்திற்கும் இறுதி எழுத்திற்கும் இடையில் இ கரமும் ர கரமும் வரும்..
- நூறு என்பதில் று கெட்டு ம கரவொற்று வந்து முடியும்.

ஒன்பது + நூறு
ஒன் + நூறு
த் + ஒன் + நூறு
தொன் + நூறு
தொள்ள் + நூறு
தொள்ள் + ஆறு
தொள்ள் + ஆ + இ + று
தொள்ள் + ஆ + இ + ர + ம்
தொள்ளாயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்று முதல் ஒன்பதின் முன் ஆயிரம் வரின்

- ஒரு என்பதில் நின்ற உ கரம்கெடும்.
- ஒருவில் இருக்கும் முதலெழுத்து நீண்டாலும் குற்றமில்லை.

ஒன்று + ஆயிரம்
ஒன் + ஆயிரம்
ஒர் + ஆயிரம்
ஒர் + உ+ ஆயிரம்
ஒரு + ஆயிரம்
ஒர் + ஆயிரம்
ஒராயிரம்
ஓராயிரம்

- இரண்டு என்னும் எண்ணிற்கு இடைநின்ற ர கரம் அம்மொழி பொருள் பெறும் போது மறைந்து விடும்.

இரண்டு + ஆயிரம்
இரண் + ஆயிரம்
இர் + ஆயிரம்
இராயிரம்
ஈராயிரம்

- மூன்று இதன் நெடுமுதல் குறுகும்.
- மூன்றின் ன கரவொற்று வ கரவொற்றாய் முடியும்.

மூன்று + ஆயிரம்
மூன் + ஆயிரம்
முன் + ஆயிரம்
முவ் + ஆயிரம்
முவ்வாயிரம்

- நான்கின் ன கரவொற்று ல கரமாகும்.

நான்கு + ஆயிரம்
நான் + ஆயிரம்
நால் + ஆயிரம்
நாலாயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- ஐந்தின் ந கரவொற்று ய காரமாகும்.

ஐந்து + ஆயிரம்
ஐந் + ஆயிரம்
ஐய் + ஆயிரம்
ஐயாயிரம்

- ஆறு என்பதில் உள்ள உ கரம் கெடும்.

ஆறு +ஆயிரம்
ஆற் + ஆயிரம்
ஆறாயிரம்

- ஏழு என்பதில் உள்ள உ கரம் கெடும்.

ஏழு + ஆயிரம்
ஏழ் + ஆயிரம்
ஏழாயிரம்

- எட்டின் ட கரவொற்று ண கரவொற்றாய் முடியும்.

எட்டு + ஆயிரம்
எட் + ஆயிரம்
எண் + ஆயிரம்
எண்ணாயிரம்

- ஒன்பது என்பதன் இறுதிக் குற்றுகரம் திரிந்து கெடாது இன் சாரியை பெற்று முடியும்.

ஒன்பது + ஆயிரம்
ஒன்பது + இன் + ஆயிரம்
ஒன்பதினாயிரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. நூறின் மடங்குகளில் இருந்து கழித்தல்

கழிக்கப்பட வேண்டிய எண்ணின் ஒன்றின் இலக்கத்தை *10* இலிருந்தும் ஏனைய இலக்கங்களை *9* இல் இருந்தும் கழித்தல் மூலம் விடையினைப்பெறலாம்.
உ –ம்

1000 – 256 = 744      1000000 – 187546 = 812454

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 0 | 0 | 0 | | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 9 | 9 | 10 | | | 9 | 9 | 9 | 9 | 9 | 10 |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 6 | | 1 | 8 | 7 | 5 | 4 | 6 |
| 7 | 4 | 4 | | 8 | 1 | 2 | 4 | 5 | 4 |


விடை *744*      விடை *812454*


**1000 - 486**
**100000 - 28735**

**1000000 - 6378**
**10000 - 7683**

## 2. 5ம் வாய்ப்பாட்டுக்குப் பின் வாய்ப்பாடு இன்றிக் கணித்தல்

9X6 என்றால் இரு இலக்கங்களையும் ஒன்றன்கீழ் ஒன்று எழுதுக. அவை பத்தை விட எவ்வளவு குறைகின்றன என்பதை அவற்றுக்கு வலது பக்கங்களிலும் எழுதுக. 9 பத்துக்கு 1 குறைய 6 பத்துக்கு 4 குறைய. பின்னர் குறுக்காகக் கழிக்க பத்தாம் இடத்து எண் வரும். குத்தாகப் பெருக்க ஒன்றன் இலக்கம் வரும்.




விடை **5 4**

விடையை *10*ன் தானத்தில் எழுதுக      விடையை ஒன்றின் (1ன்) தானத்தில் எழுதுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ-ம் 2 **88X99** என்பதை எடுத்தால் 88 நூறுக்கு 12 குறைய 99 1 குறைய

88 12 — முறை 1 — குறுக்காகக் கழிக்குக

99 1

87 ←

விடையை 10ன் தானத்தில் எழுதுக

88 12 — முறை 2 — குத்தாகப் பெருக்குக

99 1

12

விடையை ஒன்றின் (1ன்) தானத்தில் எழுதுக

விடை 8712

இதே முறையில் நீங்களும் பின்வரும் கணக்குகளைச் செய்யுங்கள்.

**65X78** **84X78**

**93X99** **62X83**

## 3. நூற்றுக்கு மேற்பட்ட எண்களைப் பெருக்குவதற்கான முறை

நூற்றுக்கு மேற்பட்ட எண்களைப் பெருக்குவதற்கு இலக்கங்களில் உள்ள ஒன்றாம் பத்தாம் எண்களைப் பெருக்கி எழுதிவிட்டு முதலாம் எண்ணினை 2ம் எண்ணின் ஒன்றாம் பத்தாம் இலக்கங்களுடன் கூட்டி கூட்டுத்தொகையை முதலில் கிடைத்த விடைக்கு முன்னர் எழுதின் முழுமையான பெருக்குத் தொகை கிடைக்கும்.

103 X 104 என்பதை எடுத்தால்

03X04 =12

முதலாம் எண்ணினை 2ம் எண்ணின் ஒன்றாம் பத்தாம் இலக்கங்களுடன் கூட்டினால் 103 +04 = 107

இதனை முதல்வந்த 12 க்கு முன்னால் எழுதின் 107 12 எனவே

103 X 104 = 10712

அவ்வாறே 1 0 1 X 1 2 3 = 01X23 = 23 101 + 23 = 124 எனவே விடை 12423.

இதே முறையில் நீங்களும் பின்வரும் கணக்குகளைச் செய்யுங்கள்.

106X 103 106 X 104

108 X 109 108 X 105

## 4. 5ல் முடியும் எண்களின் வர்க்கங்களை எழுதுதல்

5ல் முடியும் எண்களின் வர்க்கங்களைக் கண்டறிவதற்கு கடைசி எண்ணான 5ன் வர்க்கத்தை எழுதி விட்டுப் பின்னர் முதலாவதாக உள்ள எண்ணுக்கு ஒன்றைக் கூட்டி அந்த எண்ணால் முதலாவதாக உள்ள எண்ணைப் பெருக்குதல் சுருக்கமுறையாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

75X75 என்றால் 5 ன் வர்க்கத்தை எழுதி விட்டு 5x5 =25 பின்னர் முன்னால் உள்ள ஏழுக்கு ஒன்றைக் கூட்டி 8ஆல் முதலில் உள்ள எண்ணான 7 ஐப் பெருக்க 8X7 = 56 வரும். இதனை 25 க்கு முன் எழுதினால் 5625 வரும். எனவே $75^2$ = 5625. இவ்வாறே $85^2$ = (9x8=72 5X5 = 25) 7225.

## 5. இரு எண்களில் முதலாவது எண் ஒன்றாகவும் இரண்டாவது இலக்கங்களின் கூட்டுத்தொகை *10* ஆகவுமுள்ள எண்களின் பெருக்கல்

32 X 38 என்னும் எண்களில் பத்தின் எண் இரு எண்களிலும் 3. இரு எண்களிலும் ஒன்றின் எண்களைக் கூட்டின் 10 வருகிறது. இத்தகைய எண்களைப் பெருக்கின் முதலில் ஒன்நின் எண்களைப் பெருக்கி விட்டு 2 x 8 = 16 பின்னர் பத்தின் எண்ணுக்கு ஒன்றைக் கூட்டி மற்றைய பத்தின் எண்ணைப் பெருக்கி 4 X 3 = 12 அதனை முன்னைய விடையின் முன்னர் எழுதினால் 32X38 = 1216 ஆகும்.

இதே முறையில் நீங்களும் பின்வரும் கணக்குகளைச் செய்யுங்கள்.
43X47, 24X26, 62X68,17X13, 59X51, 77X73 என்பவற்றையும் இம்முறையில் பெருக்கிப் பாருங்கள்.

## 6. *11* ஆல் எண்களைப் பெருக்குதலுக்கு இலகுமுறை

11 ஆல் ஒரு எண்ணைப் பெருக்குகையில் பெருக்கப்படும் எண்ணின் நடுவே அவற்றின் கூட்டுத்தொகையை எழுதி அந்த எண்ணை விரித்து எழுதினால் விடை கிடைக்கும்.

72X11 = 7 (7+2) 2 = 792
77X11 = 7(7+7)7 = 847
234X11= 2( 2+3, 3+4) 4 =2574

## 7. *9* ஆல் பிரித்தலுக்கு இலகு முறை


9 ல் எந்த எண்ணைப் பிரித்தாலும் முதல் உள்ள எண் விடையாகவும் அந்த எண்ணின் கூட்டுத்தொகை மிகுதியாகவும் அமையும்.

23 / 9 = 2 மிகுதி 5
43/9 = 4 மிகுதி 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# GANAPATHY CASH & CARRY

For All Your Groceries & Seafood




உங்களுக்குத்தேவையான இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்,
பழவகைகள், சகலவிதமான உடன் மரக்கறிவகைகள்,
கடலுணவுப்பொருட்கள், அனைவ்வுவிதமான மளிகைப்பொருட்கள்
ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள உங்கள் நினைவில் என்றும்

YALEE MARK PRODUCTS

மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

# WINE MART

உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான உள்நாட்டு,
வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் குளிர்பானங்கள் கிடைக்கும்

**Incorporated in the Ganapathy Chain**
**34-38 Ealing Road, Wembley**
**Middx HAO 4TL**

**Tel: 020 8795 4627 / Fax: 020 8903 3185**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANGEL SUPERMARKET



சகலவிதமான மளிகைப்பொருட்கள், இலங்கை இந்திய மரக்கறி

வகைகள், கடல் உணவு வகைகள், உள்நாட்டு வெளிநாட்டு

மதுபானங்கள், குளிர்பானங்கள் என்பவற்றை நியாய விலையில்

பெற்றுக்கொள்ளலாம்

**273-275, Ilford Lane,**

**Ilford Essex IG1 2SD**

**Tel: 020 8514 2356**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# NEW MOT STATION OPEN !

# CAPITAL AUTOS LTD.

**51A MILTON AVENUE, EAST HAM, LONDON E6 1BG**

**TEL: 020 8470 4789 • FAX: 020 8472 2147 • www.capitalautos.com**



*ACCIDENT REPAIR CENTRE*
*& GENERAL SERVICING*
*& REPAIRS TO ALL*
*MAKES & MODELS*

**BMW** MERCEDES
VAUXHALL
HONDA
VOLKSWAGEN
NISSAN *Ford*




- *FULLY EQUIPPED M.O.T. & ACCIDENT REPAIR CENTRE*
- *INSURANCE REPAIRS WELCOME*
- *RECOVERY SERVICE*
- *APPROVED INSURANCE REPAIRERS*
- *COURTESY VEHICLE AVAILABLE FOR MOST REPAIRS*
- *PROFESSIONAL, FRIENDLY SERVICE AND ADVICE*
- *COLLECTION & DELIVERY WITHIN THE LOCAL AREA*

# £10 OFF *
# YOUR M.O.T. !

**HURRY- LIMITED OFFER !**

Reg: ____________________

Model: ____________________

Name: ____________________

Tel: ____________________

*BASED ON CURRENT M.O.T.FEE OF £42.10 • ONE VOUCHER PER CAR ONLY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# JR PRINT

**www.jrprint.com**

**020 8503 6643**

- Letter Heads
- Visiting Cards
- Wedding Cards
- Tamil Banners
- Cake Boxes
- Shorteat Boxes
- Colour Printing
- Raffle Tickets
- Menu, Posters
- Full Colour Printing
- Competitive Price
- Compliment Slips
- Souvenirs & Invoices
- Invitation Cards
- Signboards, Leaflets
- Birthday Cards
- Shorteat Bags
- Arangetram Books
- Fast & Reliable Services

தென்கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு
ஓர் நற்செய்தி!

கடந்த 20 வருட காலமாக கிழக்கு
இலண்டனில் சேவையாற்றிக் கொண்டிருக்கும்

**ஜே ஆர் அச்சகம்**

உங்கள் நலன் கருதி

**லூயிசம் பகுதியில்**

ஓர் புதிய கிளையை ஆரம்பித்துள்

**அனைத்து அச்சு வேலைகளும்**
**ஒரே கூரையின் கீழ்!**
**தரம்! மலிவு! உடனடி சேவை!**

**Call us for a Quotation**

எங்கள் இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்
எமது சேவைகளின் விபரத்தை அறிவீர்கள்.

**Head Office:**

57 Boundary Road
Walthamstow
London E17 8NQ
Fax: 020 8281 3879
Mob: 07956 963 470

**Our New Branch:**

20 Loampit Hill
Lewisham
London SE13 7SW
Tel: 020 8691 8729
Fax: 020 8691 8729

E-mail: contact@jrprint.com

*Visit our website and view the range of services*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VEE KAY AUTOS

*Contact: Vagan / Ashraf / Aytach*

**48 • Belfast Road • London • N16 6UH**

**Tel: 020 8806 1965**

**Mobile: 07951 296 218**

**Fax: 020 8806 0161**

* MOT
* Tyres
* BRAKES
* CLUTCHES
* SERVICING
* OVERHAULS
* CAR ELECTRICALS
* Tracking & Balancing
* ALL TYPES OF REPAIRS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# OX2 CONVENIENCE STORE & POST-OFFICE

இப் பல்பொருள் அங்காடியில்
உங்கள் நாளாந்த தேவைகளுக்கான
பல்வகையான பொருட்களுடன்
அதிர்ஷ்ட இலாபச் சீட்டு
Lottery
செய்திப் பத்திரிகைகள்
Newspapers
சுவையாள இனிப்பு வகைகள்
Confectionery
போன்றனவும்
நிழற்படப் பிரதியாக்கம்
Photocopy
ஆகியனவும் உண்டு.

1-3 Kendall Crescent
North Oxford
Oxford OX2 8NE
United Kingdom
Tele-phone : 01865 554088


Printed by JR PRINT London Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media